நன்காட்சி

இந்துசமயம்

தெரிந்து கொள்ளல் / புரிந்து கொள்ளல்

ஸ்ரீ சுவாமி நாராயணன் திருக்கோயில்

நீஸ்டென்

இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ORIGINS : இந்து சமயத்தின் தோற்றம்
ROOTS : இந்து சமயத்தின் வேர்கள்

இந்து சமயமே உலகின் மிகப் பழமையானதும், தற்காலத்திலும் மக்களால் வணங்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் சமயமுமாகும். இந்து சமயம் சுமார் 8500 வருடங்கள் பழமை வாய்ந்தது. இந்து சமயமே மிகவும் சகிப்புத் தன்மையுள்ள, அதிக அளவில் விட்டுக்கொடுக்கக்கூடிய, ஏனைய சமயங்கள் எல்லா வற்றிலும் பார்க்க மிகவும் அமைதியை விரும்பும் சமயமும் ஆகும். இந்து சமயத்தின் வேர்கள் இந்திய உப கண்டத்தில் மிகவும் விசாலித்தும், பரந்தும் காணப்படுகின்றன. கி.மு 5000 ஆண்டுகட்கு முன்னரே (BCE) இந்து நதிப் பள்ளத்தரக்கில் இந்து சமயம் பரவி இருந்தமைக்குச் சான்றாக, அண்மைக் காலத்தில் அங்கு நடைபெற்ற அகழ்வு ஆராய்ச்சிகளின் போது கண்டெடுக்கப்பட்ட இந்து சமயச் சின்னங்கள் உள்ளன. இந்து நதிப்பள்ளத்தாக்கில் வசித்த மக்கள் "இந்துக்கள்" எனப்பட்டனர். இவர்கள் இந்தியாவிற்கு வெளியே இருந்து இங்கு வந்து குடியேறியவர்கள் அல்லர். அவர்கள் காலம் காலமாகவே அங்கு வாழ்ந்தவர்கள்.

தோற்றுவித்தவர் / ஸ்தாபகர்

இந்து சமயம் ஒருவரால் மட்டுமே தோற்றுவிக்கப்பட்டதல்ல. ஞானிகளின் தவம், இடைவிடாத பிரார்த்தனைகள், தவசிரேஷ்டர்களின் உள்ளுணர்வுகள், ஆத்ம சுய பரிசோதனைகள் என்பன இவர்கட்கு இறை அனுபவங்களைக் கொடுத்தன. இவ்வாறான கூட்டு அனுபவங்கள் வேதகால நாகரீகத்திற்கு அடிப்படையாக அமைந்தன. இவற்றில் இருந்தே "இந்து தர்மம்" தோன்றியது.

நாகரீகம்

இக்காலத்தில் சீனாவில் நாகரீகம் தோன்றவில்லை. எகிப்து நாகரீகம் இந்திய நாகரீகத்தில் இருந்து பல வற்றைப் பெற்றிருந்தது. இந்தியா நாகரீகத்தில் சிறப்புற்று விளங்கி அதன் அயல் நாடுகட்குத் தனது சிறப்புக்களை வழங்கி இருந்தது.

-மில்லர்: அமெரிக்கக் கவிஞரும் பத்திரிகையாளரும்

மிகமுன்னேற்றமானசிறு பட்டணம்

மொஹஞ்சதாரோ ஹரப்பா நகர்கள் களிமண்ணாலான சுவர்களை உடைய கட்டடங்களைக் கொண்ட சுமார் 300 குடியிருப்புக்களை இந்து நதிப்பள்ளத்தாக்கில் 5000 (BCE) ஆண்டுகட்கு முன்பே கொண்டிருந்தன. அங்குள்ள வீடுகள் களிமண்ணால் செய்யப்பட்ட செங்கட்டிகளால் ஆனவை.

நம்பிக்கைகள் / எண்ணக் கருக்கள்

இந்துக்களின் தனிச் சிறப்பு யாதெனில், இறைவனின் படைப்பை முழுமையாக ஏற்றுக் கொள்ளுதலாகும். உலகில் உள்ள ஒவ்வொரு பொருளிலும், எங்கும், இறைவன் சர்வ வியாபியாக உள்ளான், என்பதை அவர்கள் உணர்ந்து இருந்தார்கள். இந்துக்களுக்குப் பகைவர்கள் இல்லை. ஒவ்வொருவருக்கும் ஆத்ம ரீதியாக மேன்நிலை அடையும் சுதந்திரம் அவர்கட்கு இருந்தது. அத்துடன் சில சில சந்தர்ப்பங்களில் பரிபூரண ஞானத்தை, இறைவன் பற்றிய உண்மையைப் பெற்றிருந்தனர்.

இந்து சமயம் பரந்த நோக்குடையது. அது மனிதனுக்கு ஒரே ஒரு வாழ்க்கை தான் என்று போதிக்கவில்லை. மாறாக மனிதனுக்குப் பல பல பிறவிகள் உண்டு என்கின்றது. அதே சமயம் இந்து சமயம் மிகவும் கட்டுக்கோப்பானது. இந்து சமயம் "கர்மவினை" தத்துவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைத்து, மனிதன் செய்யும் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் அவனே பொறுப்பாளி ஆகி, அதன் பலாபலன்களை அவனே அனுபவிக்க வேண்டும் என்று கூறுகின்றது.

இந்து சமயத்தின் மிகப் பிரதான நம்பிக்கைகள்:

பரப்பிரம்மம் : இறைவன் ஒரே ஒருவர். அவர் சர்வ வல்லமை படைத்தவர். இறைவனே எல்லாவற்றையும் தோற்றுவிக்கின்றார். இறைவன் ஞானமே வடிவானவர். சர்வ வியாபி, மனம், வாசகம் கடந்தவர். இறுதியில் மோட்சத்தைக் கொடுப்பவர்.

அவதாரம் எடுப்பவர்: பூமியில் இறைவன் அவதாரம் எடுப்பார். உலகில் அதர்மம் தலை தூக்கும் போது, தர்மத்தைக் காப்பதற்கும், பக்தர்களுக்கு அவர்களின் துன்பங்களில் நின்றும் விடுதலை கொடுப்பதற்கும், (அனுக்கிரகம்) இறைவன் பூமியில் பல்வேறு வடிவங்களில் தானே அவதாரம் எடுப்பார்.

கன்மவினை /கர்மா கோட்பாடு: இது ஒருவனது செயற்பாடுகளின் பலாபலன்களைக் கொடுத்தல் எனப்படும். உயிர்கள் தாம் தாம் செய்யும் நன்மை, தீமை வினைகளுக்கு ஏற்பப் பலன்களை அனுபவித்தலாகும். இவ் வினைகள் சென்ற சென்ற பிறவிகளிலோ, அல்லது இந்தப் பிறவியிலோ செய்யப்பட்டனவாய், அவை இப் பிறவியிலோ அல்லது இனி வரும் பிறவிகளிலோ, அந்த உயிரால், ஆத்மாவால்; அனுபவிக்கப்படுவதாகும்.

புனர் ஜன்மம்; மறுபிறவி எடுத்தல் (அவதாரம்**)** அழிவற்ற ஆன்மா, எண்பத்து நான்கு நூறாயிரம் உயிர் இனங்களில், அந்த ஆன்மா வீடு பேறு அடையும் நிலை வரும் வரை, தொடர்ச்சியாகப் பிறந்து இறந்து உழலும்.

மோட்சம்: இதுவே, ஆன்மா பரிபூரணநிலை அடைந்து, இறைவனுடன் ஒன்றுதல் எனப்படும். மனித வாழ்க்கையின் குறிக்கோள், பிறப்பு, இறப்பு என்னும் வாழ்க்கைச் சக்கரத்தில் இருந்து விடுபடுதல் ஆகும். விடுபட்ட ஆன்மா இறைவனுடன் ஒன்றி இருந்து பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டே இருக்கும்.

குரு சிஷ்ய சம்பந்தம்: இது ஆசிரிய மாணவ உறவு எனப்படும் ஆன்மீக வளர்ச்சியில் மேம்பட்ட ஆசிரியர் ஒருவரின் கருணையும் (கடாட்சம்) வழிகாட்டலும், ஆன்மா பக்குவ நிலை அடைய அதற்குத் தேவைப்படும். பக்குவப்பட்ட ஆன்மா விடுதலை பெற, மோட்சம் அடைய, இறைவனே குருவடிவில் வந்து, ஏற்றன செய்து ஆட்கொள்வார்.

தர்மம்: தர்மமே பிரபஞ்சத்தை, உலகை, அழியாமல் இருக்க வைத்து நிலை நிறுத்துகின்றது. தர்மம் என்பது ஒரு தெய்வீகச் சட்டம். சரியான முறையில் வாழ்தல், நீதியான, நேர்மையான, நியாயமான, முறையில் வாழக் காண்பிக்கும் ஓர் உன்னத பாதை, மேலான சமயம், கண்ணியமான சேவைகள், பொறுப்புணர்ச்சி, நற்குணங்களுடன் கூடிய நல்லொழுக்கம், நீதி, நியாயம், தனய, நல்லெண்ணம், உண்மை, நேர்மை, போன்ற அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு சொல் தர்மம் ஆகும்.

வேதப்பிரமாணங்கள்: வேதங்களே இந்து சமயத்தின் அதிகாரம் பெற்ற சமய முதல் நூல்கள். இந்து சமயத்தில் உள்ள எல்லா நம்பிக்கைகளும் நான்கு வேதங்களிலும் சொல்லப்பட்டவை ஆகும்.

மூர்தீ பூசை: இது உருவ வழிபாடு ஆகும். கும்பாபிஷேகம் செய்யப்பட்டுப் புனிதமாக்கப்பட்ட விக்கிரகங்களில், இறைவன் உறைவதாகக் கருதி, அவ்விக்கிரகங்கள் மக்களால் வணங்கப்படும். பக்தர்கள் இறைவன் மேல் பக்தியுடன் பூசைகள் செய்வதற்கு இவ் வகை விக்கிரகங்களே சாதனமாக அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சுவாமி நாராயணன் திருக்கோயில்

ஆதி சிற்ப சாஸ்திரங்களில் சொல்லப்பட்டபடி ஐரோப்பாவில், முற்று முழுதாகப் பழமையான பாரம்பரிய முறையில் அமைக்கப்பட்ட முதல் திருக்கோயில் இதுவாகும். இத்திருக்கோவிலை அமைக்க இரும்பு, உருக்கு போன்ற உலோகம் எதுவும் உபயோகிக்கப் படவில்லை. 2828 தொன் பல்கேரிய நாட்டு முருகைக் கற்களும், 2000 தொன் இத்தாலி நாட்டுப் பளிங்குக் கற்களும் (மார்பிள்) இந்தியாவிற்கு அனுப்பப்பட்டு, அங்கு 1500க்கும் மேற்பட்ட சிற்ப வல்லுனர்களால் ஆலய கட்டடத்துக்கு ஏற்ற முறையில் அக்கற்கள் வடிவமைக்கப்பட்டு, அக் கற்கள் மீண்டும் இலண்டன் மாநகருக்குக் கப்பலில் அனுப்பப்பட்டன.

இங்கு எல்லாமாக 26,300 செதுக்கி உருவாக்கப்பட்ட சித்திரங்கள் உள்ளன. இவற்றுள் ஆச்சரியப்பட வைக்கும் சிக்கலான உயர்ந்த அளவு இந்திய அம்பாஜி பளிங்குக் கற்களும் அடங்கும். மூன்று வருடங்களுக்குள் இக்கற்கள் ஓர் இராட்சத ஆச்சரியம் தரும் மயக்கமான அமைப்பாக அடுக்கப்பட்டுள்ளன.

சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர்களால் தற்காலத்தில் உருவாக்கப்பட்டமை ஓர் அதிசயமாகவே தோன்றுகின்றது. வணக்கத்துக்குரிய சுவாமி நாராயணனின் ஐந்தாவது ஆன்மீக வாரிசாகத் திகழ்ந்த பூஜ்ய பிரமுக் சுவாமி மகராஜ் அவர்களின் உள்ளுணர்விலும், கற்பனையிலும் பிறந்த தோற்றம் நிஜமாகியது.

கீழ்த்தளத்தில் இடம் பெற்றுள்ள "இந்து சமயத்தைத் தெரிந்து கொள்ளல்" என்ற கண்காட்சி, இந்து சமயத்தை அறிந்து கொள்ள, மிகச் சுருக்கமானதும், அதே சமயம் மிகப் பரந்த விசாலமான கற்றலும் ஆகும். அக்கண்காட்சியில் இந்து சமயத்தின் தோற்றம், வளர்ச்சி, புகழ், மகிமை என்பனவும், அத்துடன் இந்து சமயத்தின் உயர்வான கருத்துக்கள், எவ்விதம் ஒரு தனி மனிதன், ஒரு சமுதாயம் மேன்நிலை அடையவும், மேலாக உலக ஷேமத்திற்கும் பங்களிப்புச் செய்கின்றது என்பதையும் தெரிந்து கொள்ளலாம். இக்கையேடு அக் கண்காட்சியில் அங்கு கண்களுக்குப் புலனாக வைக்கப்பட்ட இந்து சமயம் பற்றிய ஆராய்ச்சிகளைத் தெரிவிக்கின்றது. ஆனால் ஒருவர் "இந்து சமயம்" பற்றிய முழுமையான அறிவை, அனுபவத்தைப் பெற வேண்டுமானால், அவர்; அக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த காட்சிப் பொருள்களை நேரே சென்று பார்த்து, அங்கே நிலவும் தெய்வீகச் சூழலையும் அனுபவித்தால் மட்டுமே இது கைகூடும்.

அடையாளம்

"ஓம்" என்பது மிகவும் மேலான, பரிசுத்தமான தெய்வீக அடையாளம்

"ஓம்" என்பது ஒரு தெய்வீக நாதம்.

"ஓம்" நாதமே படைப்பின் முதல் ஒலி. "ஓம்" என்னும் ஒலியில் இருந்தே பிரபஞ்சங்கள் தோன்றின. "ஓம்" என்னும் பிரணவ மந்திரத்தைப் பக்தி விசுவாசத்துடன் உச்சாடனம் செய்தால் சிருஷ்டிக்கும் சக்தி உண்டாகும். இச் சிருஷ்டிக்கும் சக்தி மனதின் மூன்று நிலைகளிலும் காணப்படும். மனதின் மூன்று நிலைகளாவன, (JAGRUT)சாக்கிரம்: முழிப்பு - நனவு சொப்பனம் - கனவு; (SUSHUPT) சுழுத்தி - ஆழ்நிலை உறக்கம். இந்து சமயத்தின் எல்லா அமைதியான பரிசுத்தமான கோட்பாடுகளுடன் நாங்கள் உங்களை இங்கு வரவேற்கின்றோம்.

இத் தெய்வீகமான "ஓம்" என்னும் ஒலியில் இந்து சமயத்தின் எல்லாத் தத்துவங்களுமே செறிந்துள்ளன.

இந்து சமயத்தின் பெருமைகள்

இந்து சமயத்தின் வளர்ச்சி :

எகிப்து இராச்சியத்தில் சூரியன் உதிக்க முன்பும், உரோமர் சாம்ராஜ்ஜியத்தில் சூரியன் மறைய முன்பும், சீன நாகரீகத்தில் சூரியன் பிரகாசிக்க முன்பும் இந்து சமயம் நிலை பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. ஐரோப்பாவின் பெரும் பகுதிகள் உறக்கத்தில் ஆழ்ந்து இருந்த காலப்பகுதியில் இந்து வானிலை அறிஞர்கள், வான் வெளியில் உள்ள நட்சத்திரங்களை அறிந்து இருந்தனர். இந்து சமய வைத்தியர்கள் அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டிருந்தனர். போப்பாண்டவர் ஆதிக்கத்தில் வசித்தவர்கள். கிறிஸ்தவ வேத நூல்களை இயற்ற முன்பே இந்து சமயம் தோன்றி இருந்தது.

இந்து சமயத்தின் வளர்ச்சிக்கும் பரவுதலுக்குமான காரணங்கள் பலவாகும். இந்து சமயம் மிகவும் விசாலமான கொள்கைகளைக் கொண்டிருந்தது. இந்து சமயம் விஞ்ஞானம் மற்றும் சமுதாயத்துக்குரிய எல்லா வளர்ச்சிகளையும் ஊக்குவித்தது. இந்து சமயம் ஒரு சமயம் என்ற வரையறைக்கு அப்பால் சென்று "இந்து தர்மம்" என்றே பரவலாக அழைக்கப்பட்டது. இதன் காரணம், இந்து சமயம் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி வைத்திருப்பதே. இந்து சமயத்தின் நேர்மையும் உண்மையும் யாதெனில் அது ஒரு இனத்தை அல்லது ஒரு பிரிவினரை மாத்திரம் அல்லாது இறைவனின் படைப்பை முழுமையாக ஏற்றுக் கொள்கின்றது.

இந்து சமயத்தின் அகிம்சையும், சமாதானமாக வாழும் முறையும், வாள் முனையில் அல்லது பாரிய, மத மாற்றங்களின் போதும் பாதிக்கப்படாது, தொடர்ந்தும் அதன் தூய நெறிகளில் நின்று, பெருந்தன்மையுடைய மிக்க உயரிய கருத்துக்களையே போதித்து வந்தமையால், இந்து சமயம் உலகெங்கிலுமுள்ள மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது.

தற்போது உலக சனத்தொகையில் இந்துக்கள் 13.7 வீதத்தில் (765,351,710) உள்ளனர். இந்துக்கள் 150க்கு மேற்பட்ட நாடுகளில் வசிக்கின்றனர். இந்துக்கள் வாழும் முக்கிய நாடுகளாவன.

இந்தியா	-	719,000,000
நேபாளம்	-	17,240,000
பங்களாதேசம்	-	13,960,000
இந்தோனேசியா	-	3,440,000
ஸ்ரீலங்கா	-	2,730,000
பாக்கிஸ்தான்	-	1,930,000
மலேசியா	-	1,340,000
மொரீசியஸ்	-	580,000
ஐக்கிய அமெரிக்கா	-	500,000
ஐக்கிய இராச்சியம்	-	410,000
பூட்டான்	-	380,000
தென்ஆபிரிக்கா	-	370,000
ரினிடாட்	-	300,000
பிஜி	-	291,000
கயானா	-	280,000
சிங்கப்பூர்	-	160,000
கென்னியா	-	140,000
கனடா	-	60,000

இந்து சமயத்தின் புகழ் மிக்க பண்பாடு

வேத கால நாகரீகம் இந்தியாவில் முக்கிய மூன்று நதிக்கரைகளில் செழித்திருந்தது இந்து நாகரீகத்தின் முதல் விதை சிந்து நதிப் பள்ளத்தாக்கில் முளை கொண்டது இங்கிருந்து சரஸ்வதி நதிப் (இந்நதி இன்று நிலத்தடி நதியாக ஓடுகின்றது என்று விண்வெளிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்களின் படங்களில் இருந்து அறிய முடிகின்றது.) பள்ளத்தாக்கிற்கும். அதன் பின்னர் கங்கை நதிப் பள்ளத்தாக்கிற்கும் இடப் பெயர்ச்சி அடைந்து உச்ச நிலையில் காணப்பட்டது. புனித கங்கைநதிக் கரையே புத்தி ஜீவிகளின் இடமாகி, அறிவைப் பிரகாசிக்க வைத்தது. இங்கு தான் இந்தியாவின் புகழ்மிக்க பண்பாடு மிக்க உச்ச நிலையில் காணப்பட்டது. அதனால் இந்த இடம் இந்திய கலாச்சாரத்தின் மையமாகி, உலகின் பல பாகங்களில் இருந்தும், மக்களைக் கவர்ந்தது. பயணிகள், வியாபாரிகள், அறிஞர்கள், தத்துவ சாஸ்திர வல்லுனர்கள், அரசர்கள், நாடு பிடிப்பவர்கள் எனப் பலரும் இங்குள்ள செல்வங்களால் கவரப்பட்டு, இங்கு வந்தார்கள். உலகின் பல பாகங்களில் இருந்தும் இவர்களின் வருகை, காலம் காலமாகத் தொடர்ந்து கொண்டே இருந்தது.

இந்தியாவின் தொன்மையான நாகரீகம், எகிப்து, மொசப்பொத்தோமியா, கிரேக்கம் ஆகிய நாகரீகங்களில் இருந்து பெரிதும் வேறுபட்டிருந்தது. இந்திய நாகரீகத்தின் தலை முறைத் தத்துவங்கள் வேறு பட்டிருந்தது. இந்திய நாகரீகத்தின் தலை முறைத் தத்துவங்கள் பரம்பரைப் பழக்க வழக்கங்கள் என்பன பரம்பரை பரம்பரையாகத் தொடர்ச்சியாக, இன்றைய தலைமுறை வரை பாதுகாக்கப்பட்டே வந்துள்ளன.

– ஆர்தர் பாஷம் (அவுஸ்திரேலிய சாத்திர அறிஞன்)

இந்தியாவில் தான், எதிலுமே பற்று வைத்து வாழாது வாழ்ந்த ஒரு சாதியினரைக் கண்டதாகக் கிரேக்க ஞானி கூறுகின்றார். அவர்கள் இப் பூமியில் வாழ்ந்தாலும், இப் பூமி மேல் பற்று வைக்கவில்லை. அவர்கள் நகரங்களில் வாழ்ந்தாலும் அவர்கள் நகரங்களில் நிலையாக வாழவில்லை. அவர்கள் எல்லா வற்றையும் வைத்திருந்தாலும் எதையுமே தமது என்று பற்று வைத்து வாழாமல் வாழ்ந்தார்கள்.

– அப்பலோனியஸ் ரியனியஸ் (கிரேக்க பயணி – முதலாம் நூற்றாண்டு CE)

"இப்பூவுலகில், ஆதி காலத்தில் மனிதன் தான் வாழவேண்டும் என்று கனவு கண்டு, தனக்கென ஒரு வசிப்பிடத்தை ஏற்படுத்தி இருந்தால் அது இந்தியா என்ற ஒரு நாடு தான்

– றோமெயின் றோலண்ட் (பிரான்ஸ் தத்துவ ஞானி 1886 – 1944)

சமயத்தை எடுத்துக் கொண்டால் இந்தியா ஒரு கோடீஸ்வரன் எனலாம். இந்தியா என்ற ஒரு நாட்டையே உலக மக்கள் பார்க்க விரும்புகின்றார்கள். உலகின் ஏனைய நாடுகளில் உள்ள காட்சிகளை எல்லாம் ஒருங்கே சேர்த்துப் பார்த்தாலும், இந்தியாவை ஒரு முறையாவது ஒரு க்ஷண நேரமாவது பார்த்து விடுவதே மேல் என்றே கருதுகின்றனர்.

– மார்க் ருவெயின் (அமெரிக்க எழுத்தாளர் 1835 – 1910)

ஒரு நூலினது அத்தியாயங்களில் மேற்கத்திய பண்பாட்டு அம்சங்களைக் கொண்ட ஒரு அத்தியாயத்தை ஆரம்பித்தால், அதன் இறுதியில் இந்திய சிந்தனைகள் இருக்க வேண்டும் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். இந்திய கலாச்சாரத்தின் முடிவு, மனித இனத்தின் சுய அழிவாக இருக்கமாட்டாது. சரித்திரத்தில் இத்தகைய தலையாய ஆபத்தான தருணங்களில், மனித குலத்திற்கு உள்ள ஒரே மீட்சி, இந்திய வழி ஆகும்.

– கலாநிதி ஆர்னோல்ட் ரொயின்பீ (பிரித்தானிய வரலாற்றாசிரியர் 1889 – 1975)

தனி மனிதனுக்குரிய இந்து சமயம்

நாச்சிக்கீற்றாவின் கதை

ஆயிரம் வருடங்களுக்கு முன், வேத காலத்தில் நாச்சிக்கீற்றா வாழ்ந்தார். ஒரு சமயம் தனது தகப்பனார் வஜஸ்ரவர், வயது போன, பலவீனமான, பசுக்களை ஒரு ஆன்மீகச் சடங்கிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கொடையாக அளிப்பதைக் கண்டார். இவருக்கு மனம் பொறுக்கவில்லை. தன்னையும் அவ்வாறு நன்கொடையாகக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். அவருடைய தகப்பனார் கோபித்து அவரை "உயிர்களைக் கவரும் கடவுளான இயமனுக்கு நான் உன்னைத் தானமாகக் கொடுக்கின்றேன்", என்று சபித்தார்.

சாபத்தின் படி நாச்சிக்கீற்றா தான் இறப்பின் வாசலில் தன்னம் தனியே நிற்பதை உணர்ந்தார். அவர் அவ் இடத்தில் பயமின்றி மூன்று நாட்களாக உணவு ஒய்வு இன்றி நின்றார். இயமன் வந்த போது அக்குழந்தையின் துணிச்சலான தீர்மானத்தைக் கண்டு மகிழ்ந்தான். அவர் அச்சிறுவனுக்கு மூன்று வரங்களைக் கொடுத்தார். ஆத்மாவின் அறிவு தேடல் என்பதை மூன்றாவது வரமாக நாச்சிக்சீற்றா கேட்டார். இதன் பொருள் இறப்பையும் பிறப்பையும் வெற்றி கொள்ளல் ஆகும். நாச்சிக்கீற்றாவின் இவ் வரத்தை எதிர்பார்க்காத இயமன், நாச்சிக்சீற்றாவுக்கு உலகில் உள்ள ஐஸ்வரியங்கள், இராச்சியங்கள், கன்னிப் பெண்கள், போன்ற சகல செல்வங்களையும் பதிலாகத் தருவதாகக் கூறினான். இயமன் கூறிய எவற்றாலும் நாச்சிக்கீற்றா மனம் ஊசலாட்டம் அடைய வில்லை. நாச்சிக்கீற்றாவின் மனவுறுதியும் திடமான நோக்கமும் அவனுக்கு ஆத்மா பற்றிய சகல அறிவையும் பெற்றுக் கொடுத்தது.

நோக்கம்/ குறிக்கோள் என்பதன் பொருள்

ஒரு குழந்தையின் நோக்கம் உறுதியானதாக இருந்தால் அதனால் உலகை மாற்றியும், அசைக்கவும், முடியும். நோக்கம் ஒருவனது சக்தியை ஒரு முகப்படுத்தி அவனிடத்தில் மேலதிக சக்தியை உற்பத்தி செய்து துணிச்சலையும் கொடுக்கும். நோக்கம் ஒரு விசேட தைரியத்தையும் கொடுக்கும். உயர்வான நோக்கம் எல்லா சோதனைகளையும், தூண்டப்படும் ஆசைகளையும் ஒரு சவாலாக ஏற்றுக் கொள்ளும். நல்ல நோக்கம் சில சமயம் சிறப்பையும் சவாலாக ஏற்கும்.

ஒருவனுக்கு உறுதியான நோக்கம் மாத்திரம் போதியதன்று
ஒருவனுக்குத் தேவைப்படுவது உயர்வான "நல்ல நோக்கமே"
நல்ல நோக்கம் ஒருவனை மேலே மேலே உயர்த்தும்
நல்ல நோக்கம் ஒரு தனி மனிதனை மட்டுமல்ல, முழு சமுதாயத்தையுமே உயர்த்தும்.

சுவாமி விவேகானந்தர் கூறியதாவது "எனக்கு நூறு நாச்சிகீற்றாவைத் தாருங்கள், நான் உலகின் முகத்தையே மாற்றித் தருகிறேன்" என்றார்.

இறான்ரிதேவ் என்பவரின் கதை

இறான்ரிதேவ் என்னும் அரசனுக்கு, ஒரு புகழ் மிக்க இராச்சியம் இருந்தது. இரான்ரிதேவின் மிக்க சிறப்பு யாதெனில் இறான்ரிதேவ் நற்குணங்கள், நல்லொழுக்கங்கள், தியாக மனப்பான்மை என்பனவற்றைக் கொண்டிருந்தான். தனது இராச்சியத்தை விட்டு நீங்கிச் செல்லும் எவரும் வெறும் கையுடன் போகக் கூடாது என்பதில் மிகவும் அவதானமாக இருந்தான். அதனால் எல்லோருக்கும் தொடர்ந்து பொருளை வாரி வாரி வழங்கிக் கொண்டிருந்தான்.

இப்படியான அவன் தனது செல்வம் அனைத்தையும், ஏன் தனது இராச்சியத்தைக் கூடத் தானமாகக் கொடுத்து விட்டான். இதனால் வசிக்க வீடு இன்றிப் பணமும் இன்றித் தனது குடும்பத்துடன் காட்டிற்குச் சென்றான். அவன் தொடர்ச்சியாக 48 நாட்கள் உண்ண உணவின்றிப் பட்டினியால் வருந்தினான். 49ம் நாள் அவனுக்குச் சிறிதளவு உணவு கிடைத்தது. அவன் அதை உண்ணப் புகுந்த பொழுது, பசியால் வாடிய ஓர் பிச்சைக்காரன் அவன் முன் வந்தான். இறான்ரிதேவ் அரசன் மிக்க சந்தோஷத்துடன் உணவின் ஒரு பகுதியை அப் பிச்சைக் காரனுக்குக் கொடுத்து விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து ஒரு தொழு நோயாளி அங்கு வந்தான். அவனது பசியையும் அரசன் தன்னிடம் இருந்த உணவின் ஒரு பகுதியை ஈந்து தணித்தான். கடைசியில் ஒரு நாய் குரைத்தபடியே அவ்விடம் வந்தது. அரசன் எவ்வித தயக்கமும் இன்றித் தன்னிடம் மீதி இருந்த உணவை அதற்குக் கொடுத்து நாயின் பசியையும் போக்கினான். இறான்ரிதேவ்வின் பரோபகாரத் தன்மையைக் கண்டு மகிழ்ந்த இறைவன் அவனுக்கு ஓர் வரம் கொடுத்தார். அந்த வரத்தால் அவன் இறைவனிடம் தனது இராச்சியத்தையோ அல்லது பெரும் செல்வத்தையோ அல்லது உண்ணும் உணவையோ யாசிக்கவில்லை. அவன் இறைவனிடம் கேட்ட வரம் "உலகில் உயிர் வாழும் உயிரினம் எதுவும் துன்பப்படக் கூடாது" என்பதே ஆகும்.

தியாகத்தின் பெறுமானங்கள்

தியாகம் என்பது நாங்கள் எங்களைப் பற்றி மிகக் குறைவாக எண்ணிக் கவனம் எடுத்தலும், மற்றவர்களைப் பற்றி அதிக அளவில் கரிசனை எடுத்தலும் ஆகும்.

தியாகம் என்பது பிற உயிர்கட்குச் சேவை போன்ற தொண்டுப் பணிகளில் எம்மைப் பலனை எதிர்பார்க்காது ஈடுபடுத்துதல் ஆகும்

தியாகம் என்பது எங்களிடம் உள்ளவைகளில் இருந்து, மன உவகையுடன் பிறருக்குக் கொடுத்தல் ஆகும். இது எங்களது நேரமாக இருக்கலாம், எங்களது செல்வமாகவும் இருக்கலாம், அல்லது எங்கள் உயிராகவும் இருக்கலாம்.

ஒரு அன்பான சொல், உதவும் கரம், அல்லது தோள் கொடுத்து உதவுவது போன்ற, மிகச்சிறிய செயல்களும் சேவை அல்லது தியாகம் எனப்படும்.

இவற்றைத் தினமும் எவ்வித பலனையும் எதிர்பாராமல் ஆண்டவன் சேவை என்று செய்து வருவதே நிஜமான தியாகம் ஆகும்.

தனிமனிதனுக்கான இந்துசமயம்

இந்து சமயம் அதன் தலைவர்களாலும், அவர்களின் சரித்திரங்களினாலும் வாழ்க்கையின் உண்மையான பெறுமதிகளை, அஞ்சல் முறையில் தலைமுறை தலைமுறையாக அடுத்தடுத்து பிற் சந்ததிகட்குத் தெரிவித்துக் கொண்டே வருகின்றது. ஜோர்ஜ்பேர்னாட் ஷா என்ற அறிஞர் இதை உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்திய வாழ்க்கை முறை இயற்கையானதும், அதே சமயம் ஒவ்வொருவரினதும் வாழ்க்கையின் நிஜமான வாழ்வியல் என்ற கண்ணோட்டத்திலும் அமைந்துள்ளது. நாங்கள் இயல்புக்குப் பொருத்தம் இல்லாத முகமூடிகளால திரைபோட்டு எம்மை மறைத்து வாழ்கின்றோம். இந்தியாவின் கருத்தாழங்களில் மட்டுமே இவ் உலகைப் படைத்தவரின் செயற்பாடுகள் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டு விளக்கமாகக் காணப்படுகின்றன. இத் தெய்வீக வெளிப்பாடுகளில் சேவை, அன்பு, தியாகம், பணிவு, கடமை, பக்தி, விசுவாசம், சகிப்புத்தன்மை போன்ற தனிமனிதனை நல்வழிப்படுத்தும் வழிமுறைகள் பல அடங்கியுள்ளன.

சீதையின் கதை

இந்தியப் பண்பாட்டின் முன் மாதிரிப் பெண்ணாகச் சீதை போற்றப் படுகின்றாள். சீதை இராமபிரானால் மிகவும் விரும்பப்பட்ட பக்தை, சீதை இராமனுக்குத் திருமணம் செய்விக்கப் படுகின்றாள். சீதையின் நேர்மையும் விசுவாசமும், ஸ்ரீ இராமபிரான் அயோத்தி இராச்சியத்தின் அரசனாகப் பட்டாபிஷேகம் நிகழ இருந்த அன்றே பரிசோதனைக்கு ஆளாகியது. இராமர் பட்டாபிஷேகத்தைக் காண அயோத்தி மாநகரே விழாக் கோலம் பூண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதூகலித்தது. அப்பொழுது சடுதியாக இராமருடைய சிற்றன்னை கைகேயியின் துர் அவா காரணமாக, இராமன் முடிசூடாமல், காட்டில் 14 வருடங்கள் வனவாசம் செய்யும் படி நாடு கடத்தப்பட்டார். அயோத்தி நகரே இராமரின் விதியை எண்ணித் துக்கத்தில் ஆழ்ந்தது. முடி சூடாமல் காட்டிற்கு வனவாசம் செய்ய இராமன் மகிழ்ச்சியுடன் புறப்பட்ட போது சீதையும் இராமனுடன் சென்றாள். இராமன் மட்டுமே காட்டிற்கு வனவாசம் செய்யும் படி தெரிவிக்கப்பட்டது. சீதையை வனவாசம் போகும் படி யாரும் சொல்லவில்லை. ஆனால் சீதை ஒரு உத்தமப் பெண்ணாக சந்தோஷமோ, துக்கமோ, கணவனும் மனைவியும் தங்கள் வாழ்க்கையில் வருவதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற தத்துவத்தை, உலகுக்கு எடுத்துக் காண்பித் துள்ளார்கள்.

விசுவாசத்தின் பெறுமதிகள்

- விசுவாசம் என்பது அன்பிற்கு நம்பிக்கையாக இருத்தல். விசுவாசம் என்ற பிணைப்பே ஒரு திருமணத்தை இணைத்து நிலைத்து வைத்திருக்கின்றது. திருமணம் என்பது ஒரு ஒப்பந்தம் மட்டும் அல்ல, திருமணம் ஒரு புனித விழாவாகும். திருமணம் என்பது இரு தனி மனிதர்கள், தங்களினதும், தங்கள் குடும்பம், தங்கள் சமுதாயம் என்பவற்றின் முன்னேற்றம் கருதி, வாழ்க்கை முழுவதும் சேர்ந்து இணைந்து வாழும் ஒரு பரஸ்பர நம்பிக்கையான வாக்களிப்பு ஆகும். திருமணம் என்பது கணவனும் மனைவியும், ஒருவருக்கு மற்றவர் விசுவாசமாக வாழ்தல், இன்ப துன்பங்களில், வெற்றி தோல்விகளில், ஒருவருக்கு ஒருவர் உறுதுணையாக இருத்தல், போன்ற ஒரு வாக்குறுதி ஆகும். விசுவாசம் என்பது ஒருவரது வாழ்க்கையில் கிடைக்கும் ஒவ்வொன்றையும் சமமாகப் பங்கிட்டு வாழ்தல் ஆகும்.

சிரவன் என்பவனின் கதை

சிரவன் இராமாயண காலத்தில் வாழ்ந்தவன். சிரவன், அவனது இரு பெற்றோர்களும் மூப்பு அடைந்து, பெலவீனம் அடைந்து, குருடான நிலையில் இருந்த போது, சிரவன் இளமையாகவும், வலிமையுடையவனாகவும் இருந்தான்.

ஒரு முறை சிரவனது பெற்றோர் யாத்திரை செல்ல விரும்புவதாகத் தெரிவித்தார்கள். இந்தியா ஒரு பரந்த தேசம். இந்தியாவில் யாத்திரை செல்ல இருக்கும் இடங்களும் அனேகம். அதனால் யாத்திரை செய்து திரும்பப் பல மாதங்கள் எடுக்கும். இவ்வாறான நிலையில் சிரவன் எப்படித் தனது குருடான வயது முதிர்ந்த பெற்றோர்களை, ஆற்றுப் பள்ளத் தாக்குகள், மலைகள், காடுகள், அகழிகள் என்பனவற்றைத் தாண்டி யாத்திரைக்கு அழைத்துச் செல்வான்.

இவ்வாறான தடைகளையும், மற்றவர்களின் அதைரியப் படுத்தல்களையும் மீறிச் சிரவன் தன் பெற்றோர் மீது வைத்த பாசத்தால் யாத்திரையை மேற்கொள்ள ஓர் வழியைக் கண்டு பிடித்தான். அவன் ஓர் பெரிய துலாக்கோல் போன்ற இரு பெரிய தராசுத் தட்டுகளை அமைத்தான். இரு தட்டுகளிலும் தன் பெற்றோர்களை வசதியாக இருக்கச் செய்து தானே தூக்கிச் சென்றான். சிரவன் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் தெய்வத்தின் ஆசியைப் பெற்றது. சிரவனது செய்கை பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் செய்யும் கடமைக்கு உதாரணமாக இன்றும் பெரிதும் போற்றப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையின் பெறுமதி/ முக்கியத்துவம்

கடமை என்பது பிரதி அனுகூலத்தை எதிர் பார்க்காது செய்யப்படுவது. அது பிரதி உபகாரத்தை எதிர் பார்த்தும் செய்யப்படுவது அல்ல.

கடமை என்பது ஒவ்வொருவரும் தங்கள் பெற்றோர்களுக்குச் செய்யும் ஓர் புனிதமான, மகிழ்ச்சியான செய்கையாகும்.

ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள் - அவர்களை நாம் நன்கு பராமரித்து மகிழ்ச்சியாக வைத்திருக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

நாங்கள் நலிவுற்றும், பெலவீனமாகவும், கவலைகளில் மூழ்கியும் இருந்த பொழுதுகளில், எங்கள் பெற்றோர்களே, எங்களை ஆறுதல் படுத்தி, பராமரித்துக், காப்பாற்றியவர்கள். அவர்கள் உணவு, உடை, இருப்பிடம் என்பன தந்து பாதுகாத்தார்கள். கல்வி அறிவு ஊட்டினார்கள். இவற்றுடன் நாங்கள் அவர்கட்குக் கொடுத்த இம்சைகளையும் சந்தோஷமாகவே பொறுத்துக் கொண்டார்கள்.

அவர்கள் எங்கள் மேல் பொழிந்த அன்பையும், காண்பித்த பாசத்தையும், நாம் அவர்கட்குக் கொடுப்பது எங்கள் கடமை அல்லவா?

நாங்கள் இப் பூவுலகில் பிறந்து முதல் மூச்சை விடும் போது, அவர்கள் எங்கள் அருகில் எவ்வளவு கரிசனை மற்றும் எதிர்பார்ப்புகளுடன் இருந்தார்கள்.

அதேபோல் அவர்கள் தங்கள் கடைசி மூச்சை விடும் போது, நாங்கள் அவர்களின் பக்கத்தில் இருப்பது எங்களது கடமை அல்லவா?

சமுதாயத்துக்கு இந்து சமயம் ஆற்றியவை

உலகின் மிகப் பெரிய பிரமிப்பு ஊட்டும் கண்டு பிடிப்புகளில், இந்து சமயம் சமுதாயத்திற்கு அளித்திருக்கும் சேவைகளே பெரிதும் வியப்புத் தருவன. இந்து சமயம் குறுகிய நோக்கங் களையோ அல்லது அதி தீவிரவாத, மதவாதக் கொள்கைகளையோ கொண்டிருக் கவில்லை.

இந்து சமயம் பரந்து பட்ட நோக்குடையது. இந்து சமயம் சமுதாயத்திற்கும், விஞ்ஞான ரீதியான உலகின் முன்னேற்றத்திற்கும், உயர் மட்டத்தில் ஊக்குவித்துத், துணை நின்றுள்ளது.

இலக்கியம்

மனித இனத்தின் முதற் சமய நூல்கள்

பதிவு செய்யப்பட்ட சரித்திர ஆராய்ச்சிகளை நோக்குமிடத்து. இவற்றிற்கு அப்பால் வேதங்கள் உள்ளன. வேதங்கள், இறப்பு ஏற்படும் எவராலும் சொல்லப்பட்டவை அல்ல. வேதங்கள் என்றும், எக்காலத்தும், நிலைத்திருக்கும் உண்மைகளைக் கூறும். வேதங்கள் கடவுளால் இந்தியாவில் வசித்த தீர்க்க தரிசிகட்குத் தெரிவிக்கப்பட்டவை. வேதங்கள் சந்ததி சந்ததியாக குரு சிஷ்ய முறையில், வாய் மொழி மூலமும், அவர்கள் பெற்ற அனுபவங் களினாலும், அண்மைக்காலம் வரை கற்பிக்கப்பட்டு வந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாமாக நான்கு வேதங்கள் உள்ளன

1.	இருக்கு வேதம்	-	இங்கு	10,552	மந்திரங்கள் உள்ளன
2.	யசுர் வேதம்	-	இங்கு	1,975	மந்திரங்கள் உள்ளன
3.	சாம வேதம்	-	இங்கு	1,875	மந்திரங்கள் உள்ளன
4.	அதர்வ வேதம்	-	இங்கு	5,987	மந்திரங்கள் உள்ளன

வேதம் என்பதன் பொருள் அறிவு. இருவகை அறிவு மனிதனது வாழ்க்கையைச் செம்மைப்படுத்தத் தேவைப்படுகின்றது.

அபர வித்தியா - உலகம் பற்றிய அறிவு

பர வித்தியா - தெய்வீகம் பற்றிய அறிவு

அதனால் பிரபஞ்சத்தில் உள்ள எல்லா அறிவுக்கும் வேதங்கள் களஞ்சியமாக உள்ளன. கலைகள், இசை, பன்மொழிகள், இலக்கியங்கள், பொருளாதாரம், சமயம், ஆயுதங்கள், விண்வெளி, விஞ்ஞானம், தர்க்கம், கேத்திர கணிதம், தொழில் நுணுக்கங்கள், தன்வயப்படுத்தும் வசீகர சாத்திரம், கணிதம், தத்துவம், பல்வகை சடங்குகள், உடல் நலமும் நீண்ட நாட்கள் வாழுதலும், மாயாஜால வித்தை, மருத்துவம், சிற்பசாஸ்திரம், வான்வெளிப் பயணங்கள், ஆத்மீக அறிவு, போன்ற பல வற்றையும் வேதங்கள் கொண்டிருக்கின்றன.

வேதங்களின் பாண்டித்தியம் - சூட்சும புத்தி

வேதங்களின் எந்தப் பகுதியை நான் வாசித்தாலும், இயற்கைக்கு ஒவ்வாத, இதுவரை நான் தெரிந்திராத, ஒளி ஒன்று என்னுள் பிரகாசிப்பதை உணர்கின்றேன். வேதங்களில் தெரிவிக்கப்பட்ட எவற்றிலும் மதப் பிரிவுகள் இல்லை. வேதங்கள் எக் காலத்துக்கும் ஏற்றவை. வேதங்கள், காலம், தேசம், இனம் என்பவற்றைக் கடந்தவை. பரிபூரண அறிவைப் படிக்கும் போது, கோடை கால இரவில், சொர்க்கத்தின் ஒளியைப் பெற்றது போன்ற, உணர்வைப் பெறுகின்றேன்.

-தோறே (THOREAU) **அமெரிக்க சிந்தனையாளன்**

மொழி

சமஸ்கிருதம் - மொழிகளின் தாய்

சமஸ்கிருத மொழியே மிகவும் தொன்மையானதும், மிக்க ஒழுங்கு முறையில் உள்ளதுமான மொழி, தொன்மையான சமஸ்கிருத மொழியே உலகில் மிக நீண்ட காலத்திற்குப் பாவனையில் இருந்தது என்று சரித்திரம் கூறுகின்றது.

எல்லா விதமான எண்ணங்களையும், அவ்வவற்றிற்குரிய பொருள் புலப்படும் படியான யான சொற்களைத் கொண்டிருந்து வாசிப்போர் கேட்போருக்கு இலகுவில் புரிந்து கொள்ளும் தன்மை சமஸ்கிருத மொழிக்கு உண்டு. புராணக் கதைகள் முதல் இலக்கியங்கள் வரை, விஞ்ஞானம் தொடக்கம் தத்துவ சாஸ்திரங்கள் வரை, செய்யுள் முதல் செய்யுளை அமைக்கும் முறையான யாப்பிலக்கணம் வரை, வானியல் சாஸ்திரம் முதல் உடற்கூறு வரை, இவற்றுடன் பரம்பரை (பாரம்பரியம்) கணிதம், பிரபஞ்ச சாஸ்திரம் வரை எல்லா வகையான பிரிவுகட்கும் அவ்வவற்றிற்குரிய தகுந்த சொற்களை, சொற்றொடர்களைத் தெரிவிக்கும் வல்லமை சமஸ்கிருத மொழிக்கு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்கிருத மொழியின் வளம் (செழிப்பு)

பிரமிக்கக் கூடிய வளத்தை உடைய சொற்கள், அதே கருத்தைத் தெரிவிக்கும் வேறு சொற்கள் என்பன சமஸ்கிருதத்தின் புலமையை, சகல கலா வல்லவன் என்பதைப் புலப்படுத்தும். சமஸ்கிருதத்தில் 65 சொற்கள் பூமியைக் குறிப்பனவாகவும், 70 சொற்கள் நீரைக் குறிக்கவும் என ஒத்த சொற்கள் உண்டு. (இங்கு ஒவ்வொரு சொல்லும் வேறு எந்த மொழியில் இருந்தும் பெறப் படாமல் சமஸ்கிருத மொழியில் இருந்தே ஆக்கப்பட்டவை) நீரைக் குறிக்கும் ஒத்த சொற்கள் 70ம் மழை வீழ்ச்சியின் பல்வேறு வகைகளைக் குறிப்பதற்குப் போடப்படும் முற்சேர்க்கைகள் காரணமாக 280 சொற்களாகப் பெருக்கம் அடையும். இதனால் சமஸ்கிருத மொழியின் பரந்து பட்ட செழிப்பை அறிந்து கொள்ளலாம்.

சமுதாயத்திற்கு இந்து சமயம் ஆற்றிய நன்மைகள்

கல்வி

உலகின் முதற் பல்கலைக் கழகம்

சுமார் 2700 ஆண்டுகட்கு முன்னரே (B.C.E 700) தக்கஷீலத்தில் ஒரு மிக்க புகழ் பெற்ற, மிகவும் பெரிய அளவிலான பல்கலைக்கழகம் ஒன்று அமைந்திருந்தது. தக்கஷீலம் இந்தியாவின் வட மேற்குப் பகுதியில் இருந்தது.

இப்பல்கலைக்கழகத்தில் இந்தியர்கள் மட்டுமல்லாது, தூர தேசங்களான பபிலோனியா, கிரேக்கம், சிரியா, அரேபியா, சீனா போன்ற நாடுகளில் இருந்தும் மாணவர்கள் இங்கு கல்வி பயில வந்திருந்தனர்.

இப்பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டத்தில் 68 பல்வேறு அறிவைப் புகட்டும் துறைகள் இருந்தன.

இப்பல்கலைக்கழகத்தில் துறைசார் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்களால், மிகப் பரந்த அளவிலான பாடங்கள் கற்பிக்கப்பட்டன. வேதங்கள், மொழி, இலக்கணம், மெய்யியல், மருத்துவம், சத்திர சிகிச்சை, வில்வித்தை, அரசியல், யுத்தம், வானசாஸ்திரம், சோதிடசாஸ்திரம், வணிகம், வருகாலமுரைத்தல், ஆவணப்படுத்துதல், மாய தந்திரங்கள், இசை, நடனம், மறைந்துள்ள புதையல்களைக் கண்டு பிடிக்கும் முறை, போன்ற பல பல துறைகள் கற்பிக்கப்பட்டன.

இப்பல்பலைக்கழகத்திற்குப் புகுவதற்கு ஆகக் குறைந்த வயது 16 என மட்டுப்படுத்தப்பட்டு இருந்தது. இங்கு 10,500 மாணவர்கள் கல்வி கற்றனர்.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியலில் கவுடில்லியர், பாணினி, லிவக், விஷ்ணு சர்மா போன்ற பிரபல்யமாணவர்களின் பெயர்கள் இடம் பெற்றிருந்தன.

கணிதம்

பூஜ்ஜியம் கணிதத்தில் மிக்க பலமுள்ள முக்கியமான எழுத்து

கணிதத்தில் பூஜ்ஜியம் என்ற எண்ணை இந்திய கணிதவியலாளர்களே முதன் முதலில் கண்டு பிடித்தனர். பூஜ்ஜம் இலக்கம் இல்லாவிடில் இலக்கங்களை இரட்டை முறையில் எழுதும் முறையே இருந்திருக்காது. கணனிகளும் இருந்திருக்காது. இலக்கங்களை எண்ணுதல் சிக்கலாகவும் எளிதில் கையாள முடியாமலும் இருக்கும். 1585ம் ஆண்டு இந்தியாவில் குஜராத் நகரில் கண்டெடுக்கப்பட்ட (SANKHEDA) சங்கேத செப்பேட்டில் செதுக்கப்பட்டுள்ள பூஜ்ஜியம் மிகவும் ஆதியானதாகப் பதியப்பட்ட கல்வெட்டாக இருக்கின்றது. (585 - 586 C.E) 770C.E யின் பின்னரே பூஜ்ஜியம் அராபிய நூல்களில் காணப்படுகின்றது. பிரம்ம குப்தா (17ம் நூற்றாண்டுC.E) வின் "பிரம்ம புத்தா சித்தாந்தம்" என்பதில் பூஜ்ஜியம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அரேபிய நூல்களில் இருந்தே பூஜ்ஜியம் 8ம் நூற்றாண்டில் ஐரோப்பாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. 4ம் நூற்றாண்டில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிகால சமஸ்கிருத நூல்களில் பூஜ்ஜியம் என்ற சொல்லுக்கு - எண்ணக் கருவுக்கு - சூனியம் என்ற சொல்லே உபயோகிக்கப்பட்டது. 2ம் நூற்றாண்டிலேயே பிங்கல என்பவரால் எழுதப்பட்ட "சண்ட" சூத்திரத்தில்" மிகத் தெளிவாகச் சூனியம் விபரிக்கப்பட்டுள்ளது.

GEOMETRY – கேத்திரகணிதம்

கேத்திரகணிதம் கண்டுபிடிப்பு

GEOMETRY என்ற சொல் இந்தியச் சொல்லான 'GYAAMITI'என்பதில் இருந்து உண்டாகி இருக்க வேண்டும். 'GYAAMITI' என்பதன் பொருள் பூமியை அளத்தல் ஆகும். TRIGONOMETRY என்ற சொல்லும் 'TRIKONAMITI' என்ற இந்தியச் சொல்லில் இருந்தே உண்டாகி இருக்க வேண்டும். அதன் பொருள் முக்கோண வடிவுகளை அளத்தல் 300 B.C.E ஆண்டில் இயுகிளிட் (EUCLID) கேத்திர கணிதத்தைக் (GEOMETRY) கண்டு பிடித்ததாகப் போற்றப்படுகின்றார். ஆனால் கேந்திரகணிதத்தின் (GEOMETRY) எண்ணக் கரு இந்தியாவில் 1,000 BCE ஆண்டில் நீள்சதுர, சதுர வடிவங்களில் நெருப்பு எரிக்கும் பீடங்களைச் செய்வதில் இருந்தே தோன்றி இருக்க வேண்டும். "சூரிய சித்தாந்தத்தில்" உள்ள கட்டுரைகள் (4ம் நூற்றாண்டு CE) திரிகோணகணிதத்தின் (TRIGNOMETRY) ஆச்சரியப்படவைக்கும் விபரங்களைத் தெரிவிக் கின்றன. திரிகோணகணிதம் (TRIGNOMETYY) 1200 ஆண்டுகள் கழித்தே, 16ம் நூற்றாண்டில் BRIGGS (பிறிக்ஸ்) என்பவரால் ஐரோப்பாவுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தியாவில் PI (பை) யின் பெறுமதி

ஒரு வட்டத்தின் சுற்றளவினதும் விட்டத்தினதும் (குறுக்களவு) விகிதப் பெறுமானமே PI (பை) எனப்படும். PI(பை)யின் பெறுமதி 3.1428571. "பௌத்தயான சுத சூத்திரம்" (BAUDHAYANA SUTHA SUTRA) நூல் கி.மு 6ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல் ஆகும். (6ம் நூற்றாண்டு B.C.E) இந்நூலில் இவ்விகிதப் பெறுமானம் அண்ணளவாக 3 ற்குச் சமானம் என்று சொல்லப்பட்டுள்ளது. 499 CE ஆண்டில் ஆரியபட்டர் PI(பை)யின் பெறுமதியை நான்காவது தசம பின்னம் வரை கணித்து 3.1416 என்கின்றார். இதன் பின் பல நூற்றாண்டுகள் கழித்து 825 CE ஆண்டில் அரேபிய நாட்டுக் கணித அறிஞர் "மொகமட் இப்னா மூசா" (MOHAMMED IBNA MUSA) தெரிவிப்பதாவது "PI (பை) யின் பெறுமதியைக் கொடுத்தவர்கள் இந்தியாவில் உள்ள இந்துக்களே.... இயுக்ளிட் (EUCLID) என்பவரின் இச் (சூத்திரம்) தேற்றம் கிரேக்க எழுத்தாளர்களால் பைதகரஸ் (PYTHAGORAS) என்பவருக்குச் சாட்டுதல் பண்ணப்பட்டுள்ளது.

PYTHAGORAS' THEORAM OR BUDHAYANA'S THEORAM!

பைதகரஸ் (சூத்திரம்) தேற்றம் அல்லது பௌத்தயானர் (சூத்திரம்) தேற்றம்

பைதகரஸ் தேற்றம் என்று அழைக்கப்படுவது, ஒரு செங்கோண முக்கோணியால் ஏற்படும் செம்பகத்தின் வர்க்கம், அதன் இரு பக்கங்களின் வர்க்கங்களின் கூட்டல் பெறுமானத்திற்குச் சமனாகும். இச் சமன்பாடு பௌத்தயானர் என்பவரால் அவரது பௌத்தயான சுத சூத்திரம் நூலில் முன்னரே கணிக்கப்பட்டு இருந்தது. பௌத்தயானர் விபரிப்பதாவது, ஒரு செங்கோணியின் மூலை விட்டத்தால் உண்டாக்கப்படும் பரப்பளவு (விஸ்தீரணம்) அதன் இரு பக்கங்களாலும் உண்டாக்கப்படும் பரப்பளவின் கூட்டுத் தொகைக்குச் சமமாகும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாய வளர்ச்சியில் இந்து சமயம்

கணிதம்

(100 BCE) B.C.E 100 வருடங்கட்கு முன்பே தசம கணித முறை இந்தியாவில் செழிப்பாக விருத்தி அடைந்திருந்தது

பத்தின் குறியீடுகள் மூலம் (தசம முறை) எல்லா எண்களையும் (இலக்கங்களையும்) தெரிவிக்கும் புத்திசாலித்தனமான வழி முறையை இந்தியா எங்கட்குத் தந்துள்ளது. இந்த ஆழ்ந்த அறிவும், மிக்க முக்கிய எண்ணமும், பண்டைக் காலத்து அறிஞர்களான ஆர்க்கிமிடீஸ் (ARCHIMEDES) அப்போலோனியஸ் (APPOLONIUS) மேதாவிகட்குத் தெரிந்திருக்கவில்லை

LA PLACE (இலப் பிலாசு)

இன்றைய பாவனையில் உள்ள கணிதத்தில் [கிரேக்க DECA (பத்தணி)முறையில்] D 10^{30} என்று 10 இலக்கத்துக்கு முற்சேர்க்கை சேர்த்து மிக்க உயர்ந்த எண்ணாக எழுதுவதே வழக்கில் உள்ளது. ஆனால் B.C.E 100ம் ஆண்டில் (100 B.C.E) இந்திய கணித அறிஞர்கள் 10^{53} வரை 10இன் பெறுமதிகட்குச் சரியான பெயர்களைத் திட்டவட்டமாகக் கொடுத்திருந்தனர்.

EKAM	ஏகம்	=	1
DASHAKAM	தச	=	10
SHATAM	சதம்	=	100 (10^2)
SAHASRAM	சகஸ்ரம்	=	1000 (10^3)
DASHASAHASRAM	தச சகஸ்ரம்	=	10,000 (10^4)
LAKSHAHA	இலட்சம்	=	100,000 (10^5)
DASHALAKSAAHA	பத்து இலட்சம்	=	10,00,000 (10^6)
KOTIHI	கோடி	=	100,00,000 (10^7)

(மிகுதி விபரங்கள் கையேட்டில் பார்க்க)

100இன் B.C.E ஆண்டில் எழுதப்பட்ட அனுயோக்குவார் சூத்திரம் நூலில் ஒரு எண் (எண்ணிற்குரியது 10^{140} ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

வானியல்

இந்திய வானியல் அறிஞர்கள் 3500 வருடங்களாக விண்வெளியைப் படங்கள் வரைந்து ஆராய்ந்தே வந்திருந்தனர்.

கொர்ப்பேர்னிக்கஸ் (COPERNICUS) அவர்கட்கு முன்னரான 1000 ஆண்டுகள்

1543ம் ஆண்டு கோர்ப்பேர்னிக்கஸ் பூமி சூரியனைச் சற்றி வருகின்றது என்ற கொள்கையை முதன் முதலில் வெளியிட்டார். கோர்ப்பேர்னிக் கசுக்கு 1000 ஆண்டுகட்கு முன்பே 5ம் நூற்றாண்டில் (400 - 500 CE) இந்தியாவில் ஆரியபட்டர் (ARYABHATTA) பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்றார். இந் நிகழ்வு எப்படி எனில் "ஒருவர் ஒரு படகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிக்கும் போது, கரையில் உள்ள மரங்கள் அசைகின்றன என எண்ணுவது போல் இருக்கும். இப்படித்தான் பூமியில் வாழும் மனிதர்கள் சூரியன் அசைகின்றது என எண்ணுகிறார்கள் "ஆரிய பட்டியம்" என்னும் அவரது நூலில், அவர் பூமி உருண்டையானது, அது தனது அச்சில் சுழலுகிறது சூரியனைச் சுற்றியும் பயணிக்கின்றது. அத்துடன் விண்வெளியிலும் தொங்கிக் கொண்டு இருக்கின்றது என்றுமிக்க தெளிவாக விளக்கியுள்ளார். சூரிய சந்திர கிரகணங்கள் சூரியனுடைய தொழிற்பாட்டால் ஏற்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளார்

நியூட்டன் (NEWTON) **விஞ்ஞானிக்கு 1200 ஆண்டுகட்கு முன்**

"பாஸ்கராச்சாரியார்" (BHASKARA CHARYA) என்னும் இந்திய வானியல் அறிஞருக்கு "புவியீர்ப்பு விசை" விதி முறை தெரிந்தே இருந்தது. அவர் எழுதிய "சூரிய சித்தாந்தம்" நூலில் "புவியின் ஈர்ப்புத் தன்மை காரணமாகவே பொருட்கள் பூமியில் விழுகின்றன. ஆகையால் பூமி, கிரகங்கள், நட்சத்திரக் கூட்டங்கள், சந்திரன், சூரியன் எல்லாம் ஈர்ப்பு விசை காரணமாகவே தங்களது சுற்று வட்டப்பாதையில் பயணிக்கின்றன என்றார்.

1200 வருடங்களின் பின்னர், 17ம் நுஸற்றாண்டின் பிற் பகுதியான 1687ல் சர் ஐசக் நியூட்டன் (SIR ISSAC NEWTON) புவி ஈர்ப்புக் கொள்கையை மீளக் கண்டுபிடித்தார்.

நேரம் கணித்தல்

"சூரிய சித்தாந்தம்" நூலில் பாஸ்கராச் சாரியார், பூமி சூரியனை அதன் சுற்றுப் பாதையில் சுற்றி வர எடுக்கும் நேரத்தை 9 தசம இடத்திற்குக் கணித்திருந்தார்.

பாஸ்கராச்சாரியார் = 365. 258756484 நாட்கள்

இதன் தற்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவு = 365.2596 நாட்கள்

1500 வருடங்கள் முந்திய பாஸ்கராச்சாரியாரின் பண்டைக்கால அளவிற்கும் தற்கால அளவிற்கும் உள்ள வேறுபாடு 0.000 85 நாட்கள் ஆகும். இது 0.0002% ஒரு விநாடியின் பங்கு ஆகும்.

ஒரு விநாடியின் 34,000பங்கு முதல் 4.32 பில்லியன் வருடங்கள் வரை

நேரத்தைக் கணிக்க இந்தியா கொடுத்துள்ள மிக மிகச் சிறியதும் மிகப் பெரியதுமான எண்ணக் கரு, பின்வருமாறு.

(மிகுதி விபரங்கள் கையேட்டில் பார்க்க)

சமுதாய வளர்ச்சியில் இந்து சமயம்

அறுவை சிகிச்சை

2600 ஆண்டுகட்கு முந்திய இந்தியாவில் PLASTIC SURGERY

(ஞெகிழி அறுவை சிகிச்சை)

"சுஷ்றுதா" (SHUSHRUTA) என்பவரே அறுவை சிகிச்சையின் தந்தை எனப்படுகின்றார். அவர் தனது அறுவை சிகிச்சைத் திறமைகளை 600 BCE ஆண்டுகளில் செய்து வந்தார். அவர் கன்னம், தாடைப்பகுதிகளில் உள்ள தோலை (PLASTIC) ஞெகிழி அறுவை சிகிச்சைக்குப் பயன் படுத்தினார். இதனால் நம்ப முடியாத அளவிற்கு, மூக்கு, காது, அதரம், பகுதிகள் மறு சீரமைக்கப்பட்டன. தற்கால (PLASTIC) ஞெகிழி அறுவை சிகிச்சை, சுஷ்றுதாவின் பங்களிப்பை ஏற்று இவருடைய முறையை, இந்திய முறை RHINO PLASTY (RHINO உருவாக்கப்படல்) என அழைக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

125 விதமான அறுவை சிகிச்சை உபகரணங்கள் / கருவிகள்

இந்தியாவில் வசித்த இந்துக்கள் அறுவை சிகிச்சையிலும் மிக்க முன்னேற்றம் அடைந்து இருந்தனர். அவர்கள் தலை மயிரையும் நீளப் பக்கமாக வெட்டும் அறுவை சிகிச்சை உபகரணங்களையும் வைத்திருந்தனர்.

திருமதி பிளங்கெற; (MRS. PLUNKET)

சுஷ்ருதா 125 விதமான அறுவை சிகிச்சை உபகரணங்களுடன் தமது அறுவை சிகிச்சையை நிகழ்த்தினார். SCALPELS, LANCETS, NEEDLES, (ஊசிகள்), CATHETERS (வடிகுழாய்கள்) - RECTAL (மலக்குடல்), SPECULUMS போன்றவை. இவ் உபகரணங்கள் கையினால் இறுகப் பிடிப்பதற்கு வசதியாக விலங்குகளினதும் பறவைகளினதும் தாடை எலும்புகளால் செய்யப்பட்டவை ஆகும். அவர் தையல்கள் போடுவதற்குப் பல்வேறு வழிகளை மேற்கொண்டார். தையல்கள் போடுவதற்கு அவர் குதிரையின் மயிர், நுண்ணிய நூல், மரப்பட்டைகளின் நார்கள், ஆட்டினது குடல், எறும்புகளின் தலைகள் ஆகியவற்றை உபயோகித்தார்.

300 வகையான அறுவை சிகிச்சைகள்

சுஷ்ருதா தமது "சுஷ்ருதா சங்கிதை"யில் சுருக்கமாக 300க்கு மேற்பட்ட அறுவை சிகிச்சைகள் பற்றியும், அத்துடன் 42 அறுவை சிகிச்சை செய்முறைகள் பற்றியும் விபரித்துள்ளார். இங்கு அவர் அறுவை சிகிச்சையை நுணுக்கமாக 8 வகையாகப் பிரித்துள்ளார்.

aharyam = extracting solid bodies

bhedyam = excision

chhedyam = incision

aeshyam = probing

lekhyam = scarification

vedhyam = puncturing

visravyam = evacuating fluids

sivyem = suturing

முற்கால இந்திய வைத்தியர்கள் உடலின் நோய் வாய்ப்பட்ட உறுப்புக்களை வெட்டி எறிதல், அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பிறப்பித்தல், மண்டை ஓட்டில் அறுவை சிகிச்சை , போன்ற சிகிச்சைகளை உலகில் முதல் முதலாகச் செய்துள்ளனர். RHINOPLASTY அறுவை சிகிச்சைக்கு சுஷ்ருதா முதன் முதலாக மூக்கின் பாபாதிக்கப்பட்ட இடத்தை அளப்பார். பின்னர் தனது திறமையினால் கன்னப் பகுதியில் இருந்து தோலைச் சீவி எடுத்து மூக்கில் வைத்துத் தைத்து விடுவார். அதன் கின் மருந்து பூசிய பஞ்சை வைத்து அறுவை சிகிச்சை செய்த புண்ணை மாறக் கட்டி விடுவார்.

பங்களிப்புகள்

இமயமலையின் தடுப்புச் சுவரைத் தாண்டி, மேற்குலகிறகு இந்தியா, இலக்கணம், (தருக்க) சாஸ்திரம், மெய்யியல், கட்டுக்கதைகள், தன்வயப்படுத்தும் வசீகர சாஸ்திரம், சதுரங்கம், போன்றவற்றையும், இவைகளை விட எண்களையும், தசம பின்ன முறை போன்ற பல பல வெகுமதிகளையும் வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(WILL DURANT) **வில் டுறான்ற் (அமெரிக்க சரித்திரவியலாளர்) 1885 – 1981**

மொழி

சமஸ்கிருத மொழி, அதன் பழமை எப்படி இருந்தாலும், அம் மொழி ஒரு வியப்பூட்டும் அமைப்பைக் கொண்டிருக்கின்றது. கிரேக்க மொழியிலும் பார்க்க, மிகவும் பூரணம் (முழுமை) அடைந்த மொழியாகவும், இலத்தீன் மொழியிலும் பார்க்க, ஏராளமான சிறப்புக்களைக் கொண்ட மொழியாகவும், இவ்விரு மொழிகளிலும் பார்க்க மிகவும் நேர்த்தியான மொழியாகவும் சமஸ்கிருதம் விளங்குகின்றது.

(SIR WILLIAM JONES) **(பிரித்தானிய கீழைத்தேச – அறிஞன் 1746 – 1794)**

மெய்யியல்

மனித மனம், எந்த வானத்தின் கீழ் தனது பெறுமதியான வாழ்க்கையில், மிக்க அதிக அளவில் எதிர் கொண்ட பிரச்சனைகட்குத் தீர்வுகளைப் பெற்று, அதிக அளவில் விருத்தி அடைந்துள்ளது என்று வினாவினால், நான் இந்தியாவையே சுட்டிக் காண்பிப்பேன்

(MAX MULLER) **மாக்ஸ் முல்லரர் ஜெர்மானிய அறிஞன் 1823 – 1900)**

சமயம்

இஸ்லாம், கிறித்துவம், மதங்கள், தங்கள் மனித அறிவுக்கு எட்டாத மறை பொருள்கள், மற்றும் விஞ்ஞானபூர்வமான சாதனைகட்கான பூர்வாங்க விபரங்களை இந்தியாவிடம் இருந்தே பெற்றன.

(PHILIP RAWSON) **பிலிப் றோசன் (பிரித்தானிய கிழக்கத்திய அறிஞன்)**

ATOMIC PHYSICS **அணு பௌதீகவியல் / இயற்பியல்**

இந்திய மெய்யியல் சாஸ்திரம் பற்றிய உரையாடல்களின் பின்னர் QUANTUM PHYSICS (கொட்டு பௌதீகவியல்/ இயற்பியல்) ன் சில எண்ணக் கருக்கள் வெறி கொண்டவை என்று கருதப்பட்டவை, உண்மையில் அர்த்தமுள்ளவையே என்ற நிலைக்கு வந்துள்ளன.

பபிள்யு. ஹெய்சென்பேர்க் (W. HEISENBERG) **(ஜெர்மானிய பௌதீக அறிஞன் 1901 – 1976)**

சத்திர சிகிச்சை

பண்டைக்கால இந்திய மருத்துவர்களின் சத்திர சிகிச்சைகள், துணிகரமானதாகவும், திறமை வாய்ந்ததாகவும் இருந்தன. RHINOPLASTY (RHINO உருவாக்கப்படல்) அல்லது சற்று அவலட்சணமான காதுகள் மூக்குகள் என்பனவற்றைப் புதியனவாக அமைப்பது பற்றிய அறுவை சிகிச்சைக்குப் புதிய துறை, சத்திர சிகிச்சையில் ஏற்படுத்தப்பட்டது. இத்துறையை ஐரோப்பிய அறுவை சிகிச்சை நிபுணர்கள் இன்று இரவல் பெற்றுள்ளனர்.

சேர் பபிள்யு. ஹன்ரர் (SIR.W HUNTER) **(பிரித்தானிய அறுவைச் சிகிச்சை நிபுணர் (1718 – 1783)**

இலக்கியம்

இந்தியாவின் மிகவும் பிரபலமான நூல்கள், ஒரு சாம்ராஜ்யம் எங்கட்குச் சொல்லி இருப்பவை என்று குறிப்பிடும் எவற்றையும் அற்பமானவை என்றோ, தேவையற்றவை என்றோ, சொல்லவில்லை. ஆனால் அவை பெரிய அளவில், அமைதி, சாந்தம் அளிப்பதில் உறுதியான, முதிர்ந்த புத்திசாலித்தனத்தின் குரலாகவே, அமைந்து இருக்கும். அவை இன்னொரு சந்ததியினருக்கோ அல்லது சூழ்நிலைக்கு ஏற்ப, ஆழ்ந்து சிந்திக்க வைக்கம் போது எழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் சம்பந்தமான கேள்விகளை இல்லாமல் செய்து விடும் (கேள்விகட்கான பதில்கள் அங்கு இடம் பெற்றிருக்கும்)

ஆர் டபிள்யு எமர்சன் (R.W. EMERSON) (அமெரிக்க கட்டுரையாளர் 1803 – 1882)

உலகிற்கான இந்துசமயம்

இந்துசமயம் இப் பூமி அளவிலான இருதயத்தைக் கொண்டுள்ளது. அது உலகெங்கும் உள்ள இருதயமாகும்.

இந்து சமயம் உலகிற்கு அமைதி, சமாதானம் என்பனவற்றின் உண்மையான தத்துவத்தைப் போதிக்கின்றது. அனைவரும் ஒற்றுமையாகச் சேர்ந்து வாழ்தல் என்னும் படிப்பினையை எடுத்துரைக்கின்றது.

இந்தியாவில் மட்டும் 400 க்கும் மேற்பட்ட வித்தியாசமான வெவ்வேறான பண்பாடுகளும் 850 வேறு வேறு பிரதேச மொழி பேசுபவர்களும் ஒற்றுமையாக, இணைந்து வாழ்கின்றனர். இந்து சமயம் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு, எல்லோருக்காகவும் பிரார்த்தனை செய்கின்றது.

இவ்வாறான உயர்ந்த இலட்சியம் வேறு எங்கே காணப்படுகின்றது?

இந்து சமயம் இப்பூவுலகம் அனைத்துமே ஒரே குடும்பம் என்ற கொள்கையை உருவாக்குகின்றது.

இந்து சமயத்தின் இலட்சியங்களும் பிரார்த்தனைகளும் எங்கள் உலகையே மாற்றக் கூடியவை. ஏனெனில் இந்து சமயம் படைப்பின் முழுமையையுமே நிலைநிறுத்தப் போராடுகின்றது.

விலங்குகளை அக்கறையுடன் பேணுதல்

இந்து சமயம் மனிதனை மட்டும் அல்ல அது எல்லா வகை உயிரினங்களையும் பாதுகாக்கவே முயல்கின்றது. "படைப்பு முழுவதிலுமே அங்கிங்கெனாதபடி இறைவன் கலந்திருக்கின்றான்" - இசோபநிஷத்

விலங்குகளில் தெய்வத்தன்மையைக் காணவேண்டுமாயின் விலங்குகளை அன்பாகக் கண்ணியமாக நடாத்த வேண்டும். படைப்பின் உச்ச நிலையில் உள்ள மனிதன், ஏனைய விலங்குகளைச் சுய நலத்திற்காகவோ, அல்லது அவற்றை உண்ணுவதற்கோ பயன்படுத்தக் கூடாது. மனிதன் வேடிக்கைக்காகவோ, உணவுக்காகவோ, விலங்குப் பொருட்களுக்காகவோ, அல்லது மகிழ்ச்சிக்காகவோ, விலங்குகளைக் கொல்லாமல் விடுவானேயாகில் எங்கள் உலகமே பல கொடூரச் செய்கைகளில் இருந்து விடுபட்டு விடும். இறைச்சி உண்ணுவதைத் தவிர்த்து, விலங்குகளுடன் சினேக மனப்பான்மையை வளர்த்து வாழும் உலகம் மனிதனுடைய அமைதியான பண்பை நிலை நிறுத்த உதவும்.

மனிதத் தன்மையைப் பேணுதல்

"முழு உலகமும் உயிர்கள் வசிக்கும் கூடு". (அதர்வ வேதம்) என்பதை ஏற்றுக் கொள்கின்றது.

நாங்கள் அனைவருமே ஒரே கூண்டில் வாழும் பறவைகள்.
நாங்கள் வித்தியாசமான தோல்களை உடையவர்களாக இருக்கலாம்.
நாங்கள் வெவ்வேறு மொழிகளைப் பேசுபவர்களாக இருக்கலாம்
நாங்கள் வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்களாக இருக்கலாம்.
நாங்கள் வேறான பண்பாடுகளைக் கடைப்பிடிப்பவர்களாக இருக்கலாம்.

ஆனால் நாங்கள் அனைவருமே ஒரே வீட்டில் - இந்தப் பூமியில் வாழ்பவர்கள்.

நாங்கள் அனைவரும் ஒரே கிரகத்தில் பிறந்தவர்கள் - எங்களை ஒரே ஆகாயம் சூழ்ந்துள்ளது. அனைவருமே ஒரே நட்சத்திரக் கூட்டத்தையே பார்க்கின்றோம். அனைவரும் ஒரே காற்றையே சுவாசிக்கின்றோம். நாங்கள் அனைவரும் மகிழ்வாக, இணைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேறக் கற்க வேண்டும். அல்லது அனைவருமே பரிதாபகரமாக ஒன்றாக அழிய வேண்டி நேரிடும்.

மனிதன் தனித்தும் வாழ முடியும். ஆனால் உலகில் வாழ்வதற்கு மனிதன் கூடி வாழ்ந்தால் தான் அவனால் சாகாமல் ஈரத்தல் கூடும்.

இயற்கையைப் பேணுதல்

இந்து சமயத்தில், "சமாதானம்" என்பதன் எண்ணக் கரு யாதெனில், யுத்தத்தைக் தவிர்த்தல் என்பது மட்டுமல்ல, அது மனிதனுக்கோ, சமுதாயத்துக்கோ, அல்லது நாடுகளுக்கோ சமாதானமாக வாழ்தல் என்று வரையறுக்கப்படாது அது இயற்கை என்ற பாரிய அளவிற்கு பிரிவு படுத்தப்பட்டுப் படைப்பின் அனைத்தையுமே உள்ளடக்கி எங்கும் சமாதானம் நிலவ வேண்டும் என்கிறது.

பிரார்த்தனை:

எங்கள் தலைவனே!
பூமியிலும் சொர்க்கத்திலும் சமாதானம் நிலவுவதாக!
ஆகாயம், நீர், தாவரங்கள், மரங்கள் அனைத்தும் அமைதியைப் பேணட்டும்!
எல்லாவற்றிலுமே, எங்கும், சமாதானம் - நிஜமான சமாதானம் நிலவுவதாக!
இப்பிரார்த்தனை இயற்கையைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று மனிதனை எச்சரிக்கின்றது.

எங்கள் சூழலைத் துஷ்பிரயோகம் செய்தல், அசுத்தப்படுத்துதல் அல்லது அழித்தல் போன்ற எவற்றையுமே செய்யவேண்டாம்.

எங்கள் சுற்றுப்புறத்துடன் நாங்கள் யுத்தம் செய்தால், நாங்கள் எங்களையே அழித்துக் கொள்ளும் நிலை ஏற்படும்.

உண்மையான அமைதியோ சமாதானமோ எப்பொழுது ஏற்படும் என்றால், மனிதன் தன்னுடனும், இயற்கையுடனும், இறைவனுடனும் சமாதானமாக வாழும் போது மட்டும் தான்.

சுவாமி நாராயணன் மதம்

இந்து சமயம் பல பல வழிகளாலும், மதங்களாலும், பேணிப் பாது காக்கப் பட்டு வந்துள்ளது. இவற்றுள் கலப்படமில்லாத, பரிசுத்தமான மதம், சுவாமி நாராயணன் ஸ்தாபித்த மதமாகும். இம் மதத்தின் அடிப்படை வேர்கள் வேதங்களில் பிறந்தன. வேதங்கள் பயபக்தி அளிக்கின்ற, புலமை நிறைந்த அறிவின் களஞ்சியமாக உள்ளன. வேதங்கள் சந்ததி சந்ததியாக இடைவிடாது தொடர்ந்து பரிபூரணம் அடைந்த குருமார்கள் மூலம் தெளிவாகவே விளக்கப்பட்டு வந்துள்ளன. சுவாமி நாராயணன் மதம் உலகெங்கும் பரந்து வியாபித்து உள்ளது. இது ஆரவாரம் அற்ற, வெளி வேஷங்கள் இல்லாத அதி தீவிர போக்குகளைக் கொண்டிராத மதமாகும். மதத்தைச் சரிவரத் தெரிந்து கொண்டால், இந்து சமயத்தின் உண்மையான உதாரண குணங்களையும் பெருந்தன்மைகளையும் விளங்கிக் கொள்ளலாம். இம் மதம் இன்றைய உலகிற்கு எவ்வளவு பொருத்தமாக உள்ளது. என்பதையும் உணர்ந்து கொள்ளலாம்.

ஸ்தாபகர்

வணக்கத்திற்குரிய சுவாமி நாராயணன் 1781 – 1830 CE

வணக்கத்திற்குரிய சுவாமி நாராயணன் இந்து சமயத்தின் முழுமுதற் கடவுளின் அவதாரமாகும். இவருடைய திருவுருவம் சுவாமி நாராயணன் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இவர் 1781ம் ஆண்டு சித்திரை மாதம் 3ம் தேதி இப்பூவுலகில், வட இந்தியாவில் உள்ள அயோத்தியா நகருக்கு அண்மையில் இருக்கும் "சப்பையர்- கிராமத்தில் பிறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதுகள்	நிகழ்வுகள்
7ம் வயதில்	புனித சமய நூல்களான வேதங்கள், உபநிடதங்கள் இராமாயணம், பகவத் கீதை நூல்களைத் துறைபோகக் கற்றார்.
10ம் வயதில்	காசி மா நகரில் நடைபெற்ற தத்துவ ஞான சாஸ்திர விவாதம் ஒன்றில் வெற்றி பெற்றார்.
11ம் வயதில்	தனது வீட்டைத் துறந்து 7 வருடங்களாக இந்தியா முழுவதும் யாத்திரையை மேற்கொண்டார்
14ம் வயதில்	அட்டாங்க யோகப் பயிற்சியில் வல்லமை பெற்றார்
18ம் வயதில்	தனது புனித யாத்திரையை நிறைவு செய்து குஜராத் திரும்பினார்
20ம் வயதில்	ஆன்மீகத் தலைவராக முடிசூட்டப்பெற்றார். சுவாமி நாராயணன் மதத்தை ஆரம்பித்தார்
25ம் வயதில்	500 சாதுக்களுக்குத் தீட்சை கொடுத்து அவர்களைப் பரமஹம்சர்கள் ஆக்கினார்
29ம் வயதில்	புரட்சிகரமான சமுதாயச் சீர்திருத்தங்களை ஆரம்பித்தார்.
41ம் வயதில்	அழகான திருக்கோயில்களைக் கட்டுவித்தார்.
45ம் வயதில்	SHIKSHAPATRI - "சிக்ஷா பற்ரிறி" எனப்படும் "சமயச் சட்ட ஒழுங்கு" ஒன்றை ஏற்படுத்தினார்.
49ம் வயதில்	தனது புனித வாசஸ்தலமான அக்ஷடாமில் இறைவனடி சேர்ந்தார். (AKSHARDHAM)
	அவர் இப் பூவுலகை விட்டுச் செல்லும் போது, தான் இப்பூவுலகில் ஞானஸ்நானம் பெற்ற குருமார் மூலம் தொடர்ச்சியாகப் பிரசன்னமாகி இருப்பேன், என்று கூறிச் சென்றார்.

மிகக் குறுகிய காலமான 49 வது வயதிற்குள் அவர் இந்து சமயத்தின் பெருமைகளை வெளிப்படுத்தி மறுபடியும் அதனை மேன்நிலைக்குக் கொணர்ந்தார் ஆன்மீகத்தின் முக்கியத் துவத்தைப் பெருமைப் படுத்தினார். அத்துடன் சுவாமி நாராயணன் மதத்தை நிறுவினார்.

(நூலின் இப்பகுதி சுவாமி நாராயணனின் வாழ்க்கையையும் அவரது செயற்பாடுகளையம் மிகச் சுருக்கமாகத் தெரிவிக்கின்றது.)

அற்புதங்கள் நிறைந்த சிறுபிள்ளைப் பராயம்

அற்புதங்கள் சுவாமி நாராயணனுடைய வாழ்க்கையில் ஒரு பகுதியாகும் அவர் நீதியான, நேர்மையானவற்றிற்கே அற்புதங்களை நிகழ்த்தினார். சுவாமி நாராயணன் கிராமத்தில், மீன் சரோவர் ஏரியில் மீனவர் ஒருவர் மீன் பிடிப்பதைக் கண்டார். சுவாமி அவர்கள் உயிர்களைக் கொல்லுதல் மகா பாவம் என்று அவனை எச்சரித்தார். அப்படியும் அவன் தொடர்ந்தும் மீன்களைப் பிடித்தான். சுவாமி அவர்கள் தனது தெய்வீக அருள் நிறைந்த கண்களை அவன் பிடித்த மீன்களில் பதித்தார். அதனால் ஒவ்வொன்றாக அம்மீன்கள் மீண்டும் உயிர் பெற்றுத் துள்ளி நீருக்குள் வீழ்ந்தன. இவ் அற்புதம் மீனவனை வெற்றி கொண்டது. மீனவன் தன்னுடைய பாவச் செயல்களுக்காகத் தன்னை மன்னிக்கும் படி சுவாமியை வேண்டி நின்றான். அத்துடன் இனிமேல் தான் எந்த உயிரினத்தையும் கொல்லவோ, அல்லது அவற்றிற்குத் தீங்கு விளைவிக்கவோ மாட்டேன் என்றும் கூறிச் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிப வயதில் சந்நியாசம்

தனது 11வது வயதில் சுவாமி தனது குடும்பத்தைத் துறந்து சந்நியாசி ஆனார். அவர் தன் பாதங்கட்குப் பாதணிகளை அணியாமலே புனித இமயமலை ஏறினார். அவர் புல்ஹாஸ்ரமம் (PULHASHRAM) வரை சென்றார். அங்கு கடினமான விரதங்களை, ஒழுக்க நெறிகளை, மேற்கொண்டார். 3மாத காலமாக ஆடை அணியாத உடம்புடன் (நிர்வாணமாக) ஒற்றைக் காலில், பனிப்புயல் போன்ற உடம்பை வதைக்கும் காலநிலைகளைத் தாங்கி நின்று தியானத்தில் மூழ்கினார். உலகைத் தூய்மைப் படுத்தவும், இரட்சிக்கவும், உலகை நன்மை அடையச் செய்யவுமே, அவர் இப்படியான ஒரு பிரார்த்தனையை மேற்கொண்டார். இவ் வித உலக நன்மையைக் கருத்திற் கொண்டே தனது வாலிபப் பருவத்தை இவர் செலவிட்டார். தனது 18வது வயது வரும் போது இவர் 7 நாடுகட்கு, 12,000 கிலோ மீட்டர் தூரங்களைக் கடந்து தனது பயணத்தை இனிது நிறைவு செய்தார்.

சுவாமி நாராயணன் மதம்

ஈடு இணை இல்லாத பிரார்த்தனை

"ஒரு பக்தன் உணவு இன்மையாலோ, அணிய ஆடை இல்லாமையாலோ அல்லது ஒரு தேள் கொட்டிய வலியால் துன்பப்படுவானேயானால், நான் நூறு இலட்சம் மடங்கு, எனது தோலின் ஒவ்வொரு நுண் துவாரத்திலும் அவ்வித வலியை அனுபவித்துத் துடி துடிக்கத் தயார். ஆனால் அப்பக்தனை அவன் அனுபவிக்கும் துன்பங்களில் நின்றும் காப்பாற்றி விடு.

வணக்கத்திற்குரிய சுவாமி நாராயணன்

21வது வயது ஆகும் போது வணக்கத்திற்குரிய சுவாமி நாராயணன் மதச் சடங்குகள் மூலம் குரு இராமானந்த சுவாமி அவர்களால், சுவாமி நாராயணன் மதத்தின் ஆன்மீகத் தலைவராக அபிஷேகம் செய்யப்பட்டார். இவ் ஆச்சாரிய அபிஷேகத்தின் போது சுவாமி நாராயணன் மிக்க விநயத்துடன், இரு வரங்களைத் தன் குருவிடம் கேட்டுக் கொண்டார். அவரது பிரார்த்தனை இன்று வரை சமய சரித்திரத்தின் சரித்திரக் குறிப்புக்களில் ஒரு தனித்துவம் பெறுகின்றது.

500 பரமஹம்சர்கள்

வணக்கத்துக்குரிய சுவாமி நாராயணன் 500 துறவிகளுக்குத் தீட்சை வைத்துப் பரமஹம்சர் மார்க்கத்திற்குச் சேர்த்துக் கொண்டார். இவர்கள் அனைவருமே உயர்ந்த நிலையில் உள்ள சந்நியாசிகளாவர். இப் பரமஹம்ச சந்நியாசிகள் தன்னலமற்றவர்களாகவும், ஆன்மீகரீதியாகத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டு இணைந்ததனால், அவர்கள் கடுமையான கட்டுப்பாடுகளைக் கைக் கொண்டவர்களாகவும், இருந்தனர். இவர்கள் சமுதாயத்திலும் தொடர்ச்சியாக நன்கு மதிக்கப்பட்டனர். அவர்கள் கிராமங்கள், பண்ணைகள், குடிசைகள் மற்றும் தனி மனிதர்கள் என எங்கும் தூய்மையின் புனிதத்தை எடுத்துச் சென்றனர். இவர்கள் மக்களிடையே வளர்ந்து காணப்படும் மூட நம்பிக்கைகளை ஒழிக்கவும், மற்றும் தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையானவர்களைத் திருத்தவும், - DUDHPITI - பின்னர் தவறான பழக்க வழக்கங்களான, கணவன் இறந்த பின் மனைவி அவனது ஈமத் தீயில உடன் கட்டை ஏறுதல், போன்றவற்றைச் சமுதாயத்தில் இருந்து ஒழிக்கவும் உதவினார்கள். பஞ்சம் வந்த போதும், கடும் வரட்சிக் காலங்களிலும்,இப் பரமஹம்சர்கள் ஆங்காங்கே குடி நீர்க் கிணறுகளைத் தோண்டியும், அறக்கொடை நிலையங்களை நிறுவியும் மற்றும் பல சமுதாயத் தொண்டுகளையும் மேற்கொண்டனர். இப் பரமஹம்சர்கள் மக்களிடையே பூமியில் வசிக்கும் மனிதர்கள். அவர்கள் "இறை ஒளியை" த் தாங்கள் செல்லும் இடங்களுக்கெல்லாம் எடுத்துச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து பிரதான கொள்கைகள்

NISHKAM - வாழ்நாள் முழுவதும் விவாகம் செய்யாது காமஇச்சையைத் துறந்து வாழ்தல்

NIRLOBH - பணத்தைக் கையாலும் தொடாது, சொத்து என்று எதையும் சேர்த்து வைத்திருக்காது, பேராசை அற்று வாழ்தல்

NISSNEH - குடும்பம், மனிதர், இடங்கள், இவைகளுடன் ஒட்டுதல் இன்றி பற்று இல்லாது வாழ்தல்

NISWAD - உணவு, உணவின் சுவையைக் கட்டுப்படுத்தி வாழ்தல்.

NIRMAN - கோபம், தற்பெருமை என்பவற்றால் பீடிக்கப்படாது, அகம்பாவம், தற்பெருமை தவிர்த்து வாழ்தல்.

சமுதாயத்தினால் நசுக்கப்பட்டவர்களை ஆசீர்வதித்தல் சமுதாயத்தை மேனிலைப் படுத்துதல்

சாகிராம், ஓர் தலித் - தாழ்ந்த சாதி. அவர் களவுகள் செய்தும், கொள்ளை அடித்தும், தனது வாழ்க்கையை நடாத்தி வந்தார். பெரிய நாசம் விளைவிக்கும் பஞ்சம் ஒன்று ஏற்பட்ட போது அவன் வீடிழந்து, பணம் எதுவும் இன்றி வாழ நேரிட்டது. உணவைத் தேடி அவனும், அவன் மனைவியும், 'சூரத்' நகர் நோக்கிச் சென்றனர். அவர்கள் நடந்து சென்ற கைவிடப்பட்ட கரடு முரடான பாதையில் முன்னால் சென்ற அவன் வெள்ளிக் கொலுசு ஒன்றைக் கண்டான். உடனே அவன் தன் பின்னே வரும் தனது மனைவி இக் கொலுசைக் கண்டு ஆசைப் பட்டு எடுக்காது இருக்க அதைத் தூசால் மூடி மறைத்தார். ஆனால் அவன் மனைவி அவனிலும் பார்க்க அதிக நல்லொழுக்கம், மனவுறுதி பெற்றவள் என்பதை நிரூபிக்க, "சாகிராம் நீ ஏன் கொலுசைத் தூசியால் மூடி மறைத்தாய், நான், என்று சுவாமி நாராயணனின் பக்தை ஆனேனோ அன்றிலிருந்து பிறர் பொருளைத் தூசியாகவே பார்க்கின்றேன்" என்றாரள். இவ்வாறான உயர்ந்த நீதிக் கருத்துக்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் சுவாமி நாராயணன் சமுதாயத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் வாழ்ந்தவர்களையும், இச் சமுதாயத்தையும் மேல் நிலை அடையச் செய்தார். சுவாமிநாராயணன் மதத்தைப் பின்பற்றுபவர்கள் எல்லோரும் கட்டாயமாகப் பின்வரும் ஐந்து ஆன்மீகப் பிரமாணங்களையும் பின் பற்றி வாழ் வார்கள்.

களவெடுக்காதே - புலால் உணவை உண்ணாதே - மது பானம் அல்லது போதை ஊட்டும் எவற்றையும் ருசிக்காதே- பிறன் மனைவியை விரும்பாதே - துர் நடத்தை தரும் வாழ்க்கையில் ஈடுபடாதே

சுவாமி நாராயணன் மதம்

SHIKSHAPATRI - சிக்ஷா பத்திரி

நீதி நெறிகளைக் கொண்ட, ஆன்மரீதியாக மிகச் சக்தி வாய்ந்த 212 செய்யுள்களினாலான இத் தெய்வீக நூல் சமஸ்கிருத மொழியில் உள்ளது. இந் நூலில் தினசரி வாழ்க்கைக்குத் தேவைப்படும், இந்து சமய நன்னடத்தை நன்னெறிகளின் சாராம்சம் சொல்லப்பட்டுள்ளது. இந் நூலில் எவ்வாறு தியானம் செய்ய வேண்டும் என்பதில் இருந்து எவ்வாறு மத்தியஸ்தம் செய்ய வேண்டும், எந்த முறையில் அமர்ந்திருக்க வேண்டும் என்பதில் இருந்து எங்கு எப்படி உமிழ்தல் வரை, எவரைக் கனம் பண்ணுவது முதல் யாருடைய சேர்க்கையைத் தவிர்ப்பது வரை போன்ற பல வகை நெறிகள் சொல்லப்பட்டுள்ளன.

சிக்ஷாபத்திரி மூல நூல் ஆதியில் சுவாமி நாராயணன் 1826CE அவர்களால் எழுதப்பட்டது. அதன் பின் இந்நூல் சுவாமி நாராயணன் பக்தர்களால் தினசரி வாசிக்கப்பட்டு வந்தது. குடும்பம், சமுதாயம், பொருளாதாரம், நன்னடத்தை, நிருவாகம், மற்றும் ஆன்மரீதியான பிரச்சினைகட்குக் கையாள வேண்டிய வழிமுறைகளை இந்நூல் தெரிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமம்

ஆன்மீகக் கொள்கைகளுக்கு மாறான செயல்கள், அவை உங்கட்குப் பல பல வெகுமதி மற்றும் நன்மைகளைத் தந்தாலும், நீங்கள் அச் செயல்களைச் செய்வதைத் தவிர்த்தலும், தான தருமங்கள் செய்வது மட்டுமே, ஒருவன் விரும்பும் எல்லாவற்றையும் தந்து மிக்க நன்மைகளையும் தரும்.

அஹிம்சை

சொத்துக்காக. பெண்ணுக்காக, அல்லது ஒரு இராஜ்ஜியத்துக்காக, இவற்றுள் எதற்காகவுமே நீங்கள் கொலை செய்ய முயற்சிக்க வேண்டாம்.

புலாலுண்ணாமை, மதுபானம் எடுக்காமை

நீங்கள் புலால் உணவை உண்ண வேண்டாம். அப்புலால் ஒரு ஒரு பலியிடும் பிரார்த்தனையில் கிடைத்தாலும் உண்ணவேண்டாம். அதே போல் மதுவையும் அல்லது ஏதாவது போதை ஊட்டும் பானங்களை அவை தெய்வங்களுக்குப் படைத்தவையாக இருந்தாலும் குடிக்க வேண்டாம்.

நீதி

வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட வேண்டாம். உங்கள் மகனுடனோ அல்லது நண்பர்களுடனோ சேர்ந்தும் நிலம் வாங்க வேண்டாம். அப்படி வாங்க நேரிட்டால், அப்பத்திரம் ஒரு சாட்சியால் உண்மை எனச் சாட்சிக் கையொப்பம் இட்ட, எழுத்து மூலமான பத்திரமாக இருக்க வேண்டும்.

எல்லா மதங்களையும் கனம் பண்ணுதல்

நீங்கள் சிவனுடைய, அல்லது பிற தெய்வங்களைச் சார்ந்த கோயில்களைக் கடந்து செல்ல நேரிட்டால், நீங்கள் உள்ளே வீற்றிருக்கும் தெய்வங்களுக்கு மரியாதை தெரிவித்து, தலை குனிந்து வணங்கிச் செல்ல வேண்டும்.

பக்தி

நீங்கள், உங்கள் மூன்று உடல்களினின்றும் வேறு என்ற திட நம்பிக்கையுடன், உங்களையும், பிரம்மனையும் அடையாளம் கண்டு, இறைவனைப் பூசை மற்றும் பிரார்த்தனை செய்யவும்.

(THREE BODIES - GROSS - SUBTLE - & CASUAL)

THE VACHANAMRITAM **(வசனாம்ரிதம்)**

சுவாமி நாராயணன் மதத்தின் தெய்வீகமான சமய நூல் இதுவாகும். இந் நூல் குஜராத் மொழியில், சுவாமி நாராயணனால் நிகழ்த்தப் பெற்ற 262 ஆன்மீகச் சொற்பொழிவுகளின். சரித்திர ரீதியான தொகுப்பு ஆகும்.

வசனாம்ரிதம் நூல் கேள்விகள் முறையினால் ஆன போதனைகளைக் கொண்டுள்ளது. அங்கு தர்க்கம், வியக்க வைக்கும் உருவகங்கள், ஓர் பொருள் மற்றொன்றாகக் குறிக்கப்படும் உருவணிகள், மேற்கோள்கள், அத்துடன் தெய்வத்தின் வெளிப்படுத்தல்கள் போன்ற பல இடம் பெற்று இந்நூலை அலங்கரிக்கின்றன. இவை மெய்யியல் எனும் தத்துவ ஞானக் கருத்துக்களிலும், அத்துடன் உலக அனுபவங்களிலும் உள்ள அறிவுக்கெட்டாதனவும், வாழ்வின் விடை தெரியா வினாக்களுக்கும் பதில் தருவனவாக அமைந்துள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு....

தாழ்வு மனப்பான்மையை எவ்வாறு வெற்றி கொள்ளலாம்.

உண்மையான நண்பர்களை எவ்வாறு இனம் காணலாம்.

கோபத்தை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் - அமைதிப்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு தற்பெருமையையும், பொறாமையையும் அகற்றலாம்.

நம்பிக்கையை எவ்வாறு வளர்க்கலாம்.

உண்மையான குருவை எவ்வாறு இனம் கண்டு அறிந்து கொள்ளலாம்

கடவுள் இருக்கின்றார் என்பதை எவ்வாறு உணர்ந்து கொள்ளலாம்.

புகழ்

வேதங்களிலும், புராணங்களிலும், மற்றும் உலகில் உள்ள எல்லாச் சமய நூல்களிலும், ஆன்மா மோட்சம் அடைவதற்காக எழுதப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லையும், மிக நுணுக்கமாகவும், கவனமாகவும் உற்றுக் கேட்டறிந்த பின், நான் பெற்றுத் தெளிந்த சாராம்சமே, எனது தெய்வீகப் பேருரைகளின் சாராம்சமாகும். இவையே இறுதியான இரகசியம். இறைவனை அடைய முயற்சிக்கும் சாராம்சத்தின் சாராம்சமும் ஆகும். கடந்த காலத்தில் மோட்சம் அடைந்தவர்கள், எதிர் காலத்தில் மோட்சம் அடைய இருப்பவர்கள், அத்துடன் இப்பொழுது மோட்சம் அடைய முயற்சிப்பவர்கள், எல்லோருக்கும் இந்தப் பேருரைகள், அவர்களுக்கு அவர்கள் வாழ்க்கையை நெறிப்படுத்த ஓர் நூலேணியாகும்.

– கடவுள் சுவாமி நாராயணன் (வசனாம்ரீதம் GADHADA 11 28)

சாராம்சம்

ஞானஸ்நானம் பெற்ற துறவி மீது மட்டற்ற ஆழ்ந்த அன்பு கொள்வதே ஆத்மா (உயிர்) தன்னைத் தெளிவாக அறிந்து கொள்வது ஆகும். இதுவே பரமாத்மாவையும் (கடவுள்) தெரிந்து கொள்வதற்குமான ஒரே ஒரு வழியும் ஆகும்.

– கடவுள் சுவாமி நாராயணன் (வசனாம்ரீதம் VARTAL II)

குறிப்பு: ஒவ்வொரு சொற்பொழிவும், சூழ்நிலை, நேரம், இடம் போன்ற மிகச் சரியான விபரங்களுடன் தேதிவாரியாகப் பதியப்பட்டுள்ளது.

உலக ரீதியான செயற்பாடுகள்

நன் நடத்தைக்குரிய சம்ரட்சணை (கவனிப்பு)

குடும்ப சங்கம்

குடும்ப மட்டத்தில் ஒற்றுமையை நிலவச் செய்ய, குடும்ப சங்கம் GHARSABHA - அமைக்க உலகரீதியாகப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

குடும்ப சங்கம் என்பது ஆத்மரீதியான விசாரணைகள், கருத்துப் பரிமாறல்கள் போன்றவற்றை விவாதிப்பதற்கு, குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சந்திக்கும் இடமாகும். காலப் போக்கில் 20,000 குடும்பங்கள் சந்திக்கப்பட்டு ஊக்கம் கொடுக்கப்பட்டது

சத்சங்க சங்கம்

உலகெங்கிலுமுள்ள எங்களது ஆன்மீக மையங்களிலும் ஆயிரக் கணக்கான நன்நடத்தை போதிக்கும் இடங்களிலும், வாழ்க்கையின் உண்மையான பெறுமதிகளை அறிவுறுத்துவதற்கு ஓர் ஒழுங்கு முறையான வாராந்த சங்கங்கள் நடை பெறுகின்றன.

பிரசுரங்கள்

விஸ்தாரமான அளவில் மக்களுக்கு ஊக்கமளிக்கம் நூல்கள், சமய நூல்கள் தத்துவஞானப் படிப்புக்கள், என ஓர் ஒழுங்கு முறையில் இவை பிரசுரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. இவற்றுடன் பண்பாட்டை விபரிக்கும் அட்டைகள், நல்லொழுக்கம், ஆன்மீக வளங்களைக் கொண்ட கேட்கும்(AUDIO ஒலி) மற்றும் வீடியோ நாடாக்கள் என்பனவும் வெளியிடப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மரீதியான சம்ரட்சணை (கவனிப்பு)

தனி நபருக்குரிய பூஜை

ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் தனது தினசரி காலைப் பிரார்த்தனையைச் செய்ய ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது. பிரார்த்தனையின் போது அவர்கள் தியானம், செபமாலையுடனான செபம், மற்றும் பிரார்த்தனை செய்து வணங்கலாம்.

ஆத்மீகமான/ ஆத்மீகத்துக்குரிய ஆலோசனைகள்

ஒவ்வொரு ஆத்மாவும், நன்னடத்தை, மற்றும் ஆத்மாவுக்கான வழிகாட்டல்களைத் தேடிச் செல்லும் போது சுவாமி நாராயணன் அவர்கள் தானே நேரடியாகச் சென்று உரிய வழி காண்பிப்பார்.

அமைதிக்கான நிகழ்ச்சி நிரல்கள்

7 நாட்கள் ஆத்மாவுக்கான பிரசங்கங்கள் முதல், சர்வதேச மதங்களுக்கிடையேயான மாநாடுகளில், அனைவரும் ஒற்றுமையாக வாழ்தலின் நன்மை, அமைதியாக ஒன்றாகக் கூடி வாழ்தலின் சிறப்பு, போன்ற சிந்தனைகள் மக்களிடையே பரவு ஊக்கப்படுத்தப் படுகின்றன.

சமுதாய சம்ரட்சணை (கவனிப்பு)

இயற்கையினால், அல்லது வேறு ஏதாவது முறையில் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட அனர்த்தங்கள், ஆபத்துக்கள், பஞ்சம், வெள்ளப் பெருக்கு போன்றவை ஏற்படுத்தும் அனர்த்தங்களின் போது பாரிய அளவில் உதவித் திட்டங்கள் மேற் கொள்ளப்படும்.

இலவச உணவுப் பொட்டலங்கள், ஆடைகள், மருந்துகள், வேறும் தேவைப்படும் பொருட்கள் என்பன விநியோகிக்கப்படும்.

இந்தியாவின் கிழக்கே 1993ம் ஆண்டில் ஏற்பட்ட பாரிய பூகம்பத்தின் போது (பூமி அதிர்ச்சி / நிலநடுக்கம்) "சமுத்திரால்" எனும் கிராமம் முழுமையாகப் பாதிக்கப்பட்டது. பாதிப்படைந்த அக்கிராமம் முழுவதுமே தத்தெடுக்கப் பட்டுப்புனருத்தாரணம் செய்யப்பட்டது. இப்புனருத்தாரணம் வேலைகள் 1995ம் ஆண்டில் நிறைவெய்தின.

தீய வழியில் செல்லப் பழக்கப் பட்டவர்களுக்கு எதிரான நடவடிக்கை

தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும், நடைபெறும் பாசறைகள், இடம் பெயர்ந்து செல்லும் கண்காட்சிகள், பிரசுரங்கள், வெளியீடுகள், நேரடிச் சந்திப்புக்கள் போன்ற பல்வேறு முறைகள் மூலம் 100,000க்க மேற்பட்ட மக்கள், தீய பழக்கங்கட்கு அடிமையானதில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 50,000க்கு மேற்பட்டவர்கள் தீய பழக்கங்களில் இருந்து விலகி விடுவதாக வாக்குறுதி கொடுத்திருந்தனர். சாதுக்களும், தொண்டர்கள் குழுவாகவும், தொடர்ச்சியாகப் பயணங்களை மேற்கொண்டு சமுதாயத்தை மேனிலைப்படுத்தப் பணி ஆற்றினார்கள்.

சாதி, குலம் என்பவற்றை மேனிலைப்படுத்தல்

குறிப்பிட்ட சாதியினர் வசிக்கும் இடங்களும், சாதியினர் பெரும்பான்மையாக வசிக்கும் கிராமமம் குழுவதும் இனம் கண்டுபிடிக்கப்பட்டு, மேனிலைப் படுத்தும் செயற்பாட்டிற்குத் தத்து எடுக்கப்பட்டது.

இந்தியாவில் "சில்வசா" இடத்தில் உள்ள குறிப்பிட்ட சாதியினர் வசிக்கும் 72 கிராமங்களில், 35 கிராமங்கள், ஏற்கெனவே தீய பழக்க வழக்கங்கட்கு அடிமையானதில் இருந்தும், மூடநம்பிக்கைகளைப் பின்பற்றுவதில் நின்றும் விடுவிக்கப் பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகளாவிய செயற்பாடுகள்

பண்பாடு பராமரிப்பு

சர்வதேச விழாக்கள் – பண்டிகைகள்

தேசிய, சர்வதேச மட்டங்களில் எடுக்கப்படும் விழாக்கள், மாநாடுகள், கருத்தரங்குகள் மூலம் இந்தியப் பண்பாடு மக்களிடையே பரப்பப்படுகின்றது. இலண்டன் மாநகரில் உள்ள அலெக்சாந்திரா பிளேஸ் இடத்தில் 1985ம் ஆண்டில் நடை பெற்ற இந்தியப் பண்பாட்டு விழா 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களைக் கவர்ந்திருந்தது. அமெரிக்காவில் உள்ள "எடிசன்" நகரில் 1991ம் ஆண்டு நடைபெற்ற இந்தியப் பண்பாட்டு விழா 1.2 மில்லியன், விழாவைப் பார்வையிடும் மக்களால் பார்வையிடப்பட்டது.

பண்பாட்டு மையங்கள்

"அக்ஷடாம்" (இந்தியாவின் காந்தி நகரில் அமைந்துள்ள அக்ஷடாம் கண்காட்சிகளையும், அனுபவங்களையும் அத்துடன் ஓர் ஆராய்ச்சி மையத்தையும் 23 ஏக்கர் பரப்பளவில் கொண்டு இருக்கின்றது) போன்ற பிரசித்தி பெற்ற, பன்முகப்பார்வைகளைக் கொண்டுள்ள பண்பாட்டு மையங்கள், பரம்பரைப் பழக்க வழக்கங்களைப் பிரதிபலிக்கும் கட்டுக்கதை, நடனங்களையும், சங்கீதத்தையும் மக்களுக்குப் பயிற்சி அளித்து வருகின்றன. இவை இந்தியப் பண்பாட்டின் சாராம்சம் ஆகும். இவை உலகம் எங்கும் விருத்தி செய்யப்படுகின்றது.

பண்பாட்டிற்குரிய பாட விதானம்

ஆண்டு தோறும் 40,000 பேர் பண்பாட்டு விழிப்புணர்ச்சியைப் பாட விதானமாகக் கொண்ட சர்வதேச பாடத்திட்டத்தின் பரீட்சைகளை எடுக்கின்றார்கள். இச் சர்வதேச பாடத்திட்டம் மிக்க பெறுமதி வாய்ந்த பாட விதானத்தைக் கொண்டுள்ளது.

சூழலைப் பராமரித்தல்

மரம் நடுகை

நூற்றுக்கணக்கான கிராமங்களில் பரம்பி உள்ள 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மரங்களை வளர்ப்பதற்குத் தொண்டர்கள், அவற்றைத் தந்து எடுத்தும், புதியனவாக மரங்களை நாட்டியும் வந்துள்ளனர்.

கிணறுகள் புனர்நிர்மாணம்

1994ல் சாதுக்களும் தொண்டகளும் தாங்களே நேரடியாகக் கிணறுகள் புனர்நிர்மாணிப்பதில் பங்கு கொண்டும் மற்றும் அதற்கான வழிகளைக் காண்பித்தும் 190 கிராமங்களில் 4,600 கிணறுகளைப் புனரமைத்துள்ளனர்.

அலுமினியம் மீள் சுழற்சி

ஐக்கிய இராச்சியம் நாட்டில், எங்கள் கிளை, சூழல் மாசுபடாத, பாதிக்கப்படாத வகையில், அலுமினிய மீள் சுழற்சித் திட்டத்தை ஆரம்பித்தது. இதற்காக அவர்கள் 55 இலட்சத்திற்கு மேற்பட்ட அலுமினிய டப்பிகளையும் 2.2 தொன், மிக மெல்லிய தகடுகளையும் (FOILS) சேகரித்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக்கான பராமரிப்பு

விழிப்புணர்ச்சி

எழுதவும் படிக்கவும் பழகி இருத்தல் வேண்டும், என்ற மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சியும், சீதனம் வாங்கக் கூடாது என்ற பிரச்சாரமும், அங்கு வசிக்கும் மக்களிடையேயும், பின்னர் அந்தப் பிரதேசம் முழுவதிலும் பிரமிக்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தி இருந்தது. எல்லாமாக 20,000 இளைஞர்கள் சீதனம் வாங்குவதில்லை என்று வாக்குறுதி கொடுத்திருந்தனர். இதனால் மக்களிடையே எழுதப் படிக்கத் தெரிந்திருந்த விகிதம் அதிகரித்ததை இவர்களால் தத்து எடுக்கப்பட்ட பிரதேசங்களில் அடைய முடிந்தது

பாடசாலைகளும் பாடசாலை விடுதிகளும்

உலகெங்கிலுமுள்ள 7 பாடசாலை விடுதிகளையும், 8 பாடசாலைகளையும் தவிர்த்து, எங்களது இலண்டன் மா நகரில் உள்ள சுயாதீனப்பாடசாலையான சுவாமிநாராயணன் பாடசாலையே, ஐரோப்பா முழுவதிலும் இந்துப் பண்பாட்டின் அடிப்படையில் நடைபெறும் முதலாவது பாடசாலையாகும்.

ஏனைய முக்கிய அம்சங்கள்

கண்காட்சியை வேறாக விடுத்தால், ஸ்ரீ சுவாமி நாராயணன் கோயில் மேலும் பல பல பார்த்து கண்டு மகிழும் இடங்களையும் கொண்டுள்ளது. இங்கு வருகை தரும் பார்வையாளர்கள் இச் சிறப்புக்களையும், இந்து சமயம் பற்றிய அறிவினையும் நேரே பார்த்து, அனுபவ அறிவில் தெரிந்து கொள்ளலாம்.

மூர்த்திகள் (விக்கிரகங்கள்)

இங்கு வணங்கப்படும் விக்கிரகங்கள் பளிங்குக் கற்களாலான தெய்வத்திருமேனிகள் ஆகும். இம் மூர்த்திகளின் திருமேனியில், இறைவனத தெய்வாம்சம், அதற்கான கிரியைகள் நடாத்திப் பெறப்பட்டு, உட்செலுத்தப்பட்டு அங்கு பொதியப் பட்டுள்ளது. இவ்வாறான மூர்த்திகளே தினசரி வணங்கப் படுகின்றன. இங்கு 5 ஆராதனைகளும், மற்றும் சடங்குகளும் தினசரி இடம் பெறும். இத் தெய்வாம்சம் பெற்ற மூர்திகள் (விக்கிரகங்கள்) ஆழ்ந்த பக்தியுடனும் நம்பிக்கையுடனும் வணங்குபவர்கட்கு, அவர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றி வைக்கும், வணங்குபவர்கட்கும் ஆத்மரீதியான மனநிறைவைக் கொடுக்கும். DHAM, DHAMI, MUKTA (GUNALITANAND, (SWAMI LORD SWAMI NARAYANA (சுவாமி கடவுள் சுவாமி நாராயணன்) GOPALANAND SWAMI) GHANSHYAM MAHARAJ, HARI KRISHNA MAHARAJ, RADHA KRISHNA, SITA RAM, SIVA PARVATHI, GANAPATIJI, HANUMANJI, AND GURPPARAMPARA (கடவுள் சுவாமி நாராயணனின் ஆன்மீக வாரிசுக்கள்) இவர்கள் அனைவரினதும் தெய்வத்திருமேனிகள், மக்கள் வழிபாட்டிற்காக இத் திருக்கோயிலில் வைக்கப்பட்டுள்ளன.

HAVELI

ஸ்ரீ சுவாமி நாராயணனுடைய HAVELI, கைத்திறன் பெற்ற கைவினைஞர்களால், மரத்தால் செய்யப்பட்ட, பார்ப்பவர்களை வசீகரிக்கும் வேலைப்பாடு ஆகும். கடந்த நூற்றாண்டுகளில் இவ்வித HAVELI உலகின் எப்பகுதியிலும் கட்டப்படவே இல்லை. இது ஒரு பன்முகப் பார்வைகளை உள்ளடக்கிய பண்பாட்டு மையம். இங்கு சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை நாட்களில் சபை தவறாமல் கூடும் இங்கு ஒரு பெரிய பிரார்த்தனை மண்டபம், மற்றும் விளையாட்டுத் துறைக்கான மண்டபம், சமையல் அறை, நூலகம் என்பனவும் அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கமளித்தவர்

பூஜ்ய பிரமுக் சுவாமி மகராஜ், கடவுள் சுவாமி நாராயணனின் ஐந்தாவது ஆனமீக வாரிசு ஆவார். இவரே தற்பொழுது சுவாமி நாராயணன் மதத்திற்குத் தலைவராக விளங்குகின்றார்.

தனக்கென சொத்து, சுகம் என எதையும் தேடாமல், சுவாமிஜி அவர்கள் திருமணமும் செய்து கொள்ளாமல் பிரமச்சாரியாகவே, ஆன்மீகத் துறவியாக வாழ்ந்து வருகின்றார். இந்து சமயத்தின் ஆன்மீக வழி வந்த பரம்பரைப் பழக்க வழக்கங்களை, அவற்றின் புனிதத்தன்மை கெடாதபடி, அவரே வாழ்ந்து காண்பித்து அவதார புருஷராகத் திகழ்கின்றார். அவருடைய பிரசன்னத்தில் மக்களிடம் எழுகின்ற ஐயங்கள் அற்றுப் போகும், தடுமாற்றங்கள் தெளிவு பெறும், புண்படுத்தப்பட்ட மனங்களும் குணமடையும், மனமும் உற்சாகம் பெற்று அமைதி பெறும். வாழ்க்கையின் மிக்க சிக்கலான கடினமான கேள்விகட்கும் மக்கள் பொருத்தமான, நீதியான நியாயமான விடைகளைத் தெரிந்து தெளிவு பெறுவார்கள்.

தனிப்பட்ட மனிதனின் மிகச் சிறிய தேவையையும் பூர்த்தி செய்ய இவர் சமுதாயத்தில் தொடர்ச்சியாகப் பயணித்துக் கொண்டே இருப்பார். சுவாமிஜி அவர்கள் தானே நேரடியாக 500,000த்திற்கும் மேற்பட்ட மக்களுக்குப், புத்திமதிகள், அறிவுரைகள், ஆலோசனைகள், வழங்கியுள்ளார். மேலும் 435,000 கடிதங்களை வாசித்து, அவற்றிற்குப் பதிலும் அனுப்பியுள்ளார். சுவாமிஜிஅவர்கள் சாதாரண மக்களின் குறைகளைத் தீர்க்கவும் அருளாசி வழங்கவும் 9,000த்திற்கு மேற்பட்ட கிராமங்கட்கும், 200,000 வீடுகட்கும் வருகை புரிந்துள்ளார்.

மனிதர்கள் மேல் அவர் இயல்பாகவே கொண்ட இரக்கம், அன்பு, மற்றும் ஒரு பிரச்சனைக்கான ஆழ்ந்த அக்கறை, அத்துடன் அவற்றை நீக்குவதற்கான மனிதாபிமானத்துடன் எடுக்கும் முயற்சி, போன்ற இவரது பற்பல சமுதாயம்மேல் வைத்திருக்கும் பண்புகள், நன்நடத்தை, சமுதாயம், கல்வி, கலாச்சாரம், ஆன்மீகம் போன்ற பல திட்டங்களுக்குச் சர்வதேச அளவில் வித்திட்டன.

சுவாமிஜி அவர்களுடைய ஆத்மார்த்தமான பணிவு, அடக்கம், சூட்சும புத்தி எளிமை, படாபோடபமில்லாத வாழ்க்கை முறை என்பன, உலகத்தில் உள்ள பல மதங்களின் ஆன்மீகத் தலைவர்களையும், நாடுகளின் தேசியத் தலைவர்களையும் நெகிழ வைத்து அவர்களது மனங்களை உருக்கி உள்ளன. ஆனால் இவை எல்லாவற்றையும் விட மிக்க பிரதானமானது, அவருடைய அமைதியான பணிகள், மனக்குழப்பம் இல்லாத இறைவன் மேல் வைத்திருக்கும் பேரன்பும் ஆகும். சுவாமிஜியின் இப் பண்புகள் நாடுகள், மதங்கள், சாதிகள், வாதங்கள் என்பவற்றைக் கடந்து செல்கின்றன. இவை சுவாமிஜி அவர்களை சர்வதேச அளவில், பூஜிக்கத்தக்கவராகவும், மரியாதைக்குரியவராகவும், வைத்திருக்கின்றன.

–மற்றவர்கட்கு நாம் செய்யும் நன்மைகளில் எங்கள் சிறப்பு தங்கியுள்ளது
–பிரமுக் சுவாமி மகராஜ்

ஒரு அத்தியாயம் மேற்கத்திய கலாச்சாரத்துடன் ஆரம்பித்திருந்தாலஅதன்இறுதி அத்தியாயம் நிச்சயம் இந்தியப் பண்பாட்டினைக் கொண்டிருக்கும்,என்பது தெள்ளத் தெளிவாகத் தெரியக்கூடியதாக உள்ளது.

அவ்வாறு அந்த முறையில் அமையாவிட்டால், அது மனித இனத்தின் சுய அழிவாகவே அமையும்

சரித்திரத்தில் இப்படியான முதன்மை பெற்ற மிக்க ஆபத்தான தருணத்தில்ஈ மனித இனத்தின் மீட்சிக்கான ஒரே ஒரு வழி இந்தியப் பண்பாட்டின் படி வாழ்தல் ஆகும்.

- DR. ARNOLD TOYNBEE (BRITISH HISTORIAN 1889 - 1975)
- கலாநிதி ஆர்னோல்ட் ரொயின்பீ (பிரித்தானிய சரித்திர அறிஞன் 18890-1975

தொடர்பு கொள்ளும் முகவரி

ஸ்ரீ சுவாமி நாராயணன் திருக்கோயில்
105 - 119 பிறென்ற் பீல்ட் வீதி
நீஸ்டன்
இலண்டன் NW10 8JP
ஐக்கிய இராச்சியம்
தொலைபேச.(020) 8965 - 2651

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்து சமயத்தை விளங்கிக் கொள்ளல்" என்னும் இந்நூல் இலண்டன் மாநகரில் நீஸ்டெனில் அமைந்துள்ள **ஸ்ரீ சுவாமி நாராயணன் திருக்கோவிலின் பிரசுரம் ஆகும்.**

ஆங்கிலத்தில் உள்ள இந் நூலைத் தமிழில் தருபவர்:

வை. இரகுநாதமுதலியார். M. SC

சித்தாந்த பாலபண்டிதர் - இளம் சைவப் புலவர்

POST GRADUATE DIPLOMA IN EDUCATION

POST GRADUATE DIPLOMA IN HINDU CIVILIZATION

முன்னை நாள் வெளிவாரி தமிழ் மொழிபெயர்ப்பாளர்

(அரச பாட நூல் வெளியீட்டுத் திணைக்களம்)

இந்நாள் நம்பிக்கைப் பொறுப்பாளர்

ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்

நீராவியடி - யாழ்ப்பாணம்

சைவ சமயிகள் பலரும் படித்துப் பயன்பெற இந் நூலை அழகுற அச்சிட்டு வெளியிடுபவர் .

திரு. திருமதி இராஜேஸ்வரன்

Institute of Nursary Studies and Gender Development
Moolai, Chulipuram.

TEL : 021 2250163
FAX : 021 2250163
CELL : 077 0200724
E-MAIL : trajeswaran5@gmail.com
WEB : INSGDMOOLAI.ORG

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை:- 200/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம் 021 2219129